விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 மாசி 6 றவி ஆகிர் 23 இதழ் 6

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 18-2-82


## பாக். வெளிநாட்டமைச்சர் திடீர் ராஜினுமா!

ராவல்பிண்டி, பெப். 17 பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சர் ஆஹா ஷாகி, திடீரெனத் தமது பதவியை ராஜினுமாச் செய்துள்ளார்.

இவரது ராஜினுமாக் கடிதத்தை மிகுந்த அதிருப்தியுடன் ஏற்றுக்கொண்டதாக பாகிஸ்தான் ஜனுதிபதி ஸியாவுல் ஹக் தெரிவித்தார்.

1977ல் பாகிஸ்தான் அதிபரின் ஆலோசகராக இருந்த ஜனுப் ஆஹா ஷாகி, 1980 ஜூன் மாதத்தில் வெளிநாட்டு அமைச்சராகப் பொறுப்பேற்ருர்!

இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான் இவர் இந்தியாவுக்கு விஜயஞ்செய்து பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்துச் சுமுகமான முறையில் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்ததுடன், திருமதி இந்திரா காந்தி தெரிவித்திருந்த ஒரு யோசனையையும் வரவேற்றிருந்தார்.

ராஜினுமாவுக்கான காரணத்தை ஜனுப் ஆஹா ஷாகி

(8ம் பக்கம் பார்க்க)

# வடபகுதி நேரடிரயில்சேவை சீர்குலைவு!

## மாகோ அருகில் ரயில்தடம் புரண்டது!

### ஐந்து பிரயாணிகள் படுகாயமடைந்தனர்

(மாகோ)

**காங்கேசன்துறையிலிருந்து கோட்டைக்கு நேற்றுக்காலை புறப்பட்ட ரயில் வண்டி மாகோ ரயில்நிலையத்துக்கு அருகில் தடம்புரண்டதனுல் வடபகுதி நேரடி ரயில் சேவை சீர்குலைந்தது. இவ்விபத்தில் ஐவர் படுகாயமடைந்தனர்.**

காங்கேசன்துறை—கோட்டை அம்பன்பொல—மாகோ நேரடி ரயில்சேவை பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து ரயில்நிலையங்களுக்கிடையே பஸ் சேவை நடைபெறுகிறது.

காங்கேசன்துறையிலிருந்து நேற்றுக்காலை ஆறுமுப்பது மணிக்கு கோட்டை நோக்கிப் புறப்பட்ட சரக்கு ரயில்வண்டி அம்பன்பொல ரயில் நிலையத்துக்கும் மாகோ ரயில் நிலையத்துக்குமிடையே பிரதான பாதையில் தடம்புரண்டது. இந்த ரயில்வண்டியில் பிரயாணிகள் பெட்டிகளும் இணைக்கப்பட்டிருந்தன.

சரக்குகளை ஏற்றி வந்த ஐந்து பெட்டிகளும், ஐந்து பிரயாணிகள் பெட்டிகளும் சேதமடைந்தன. பிரயாணிகள் பலருக்குச் சிறு காயங்கள் ஏற்பட்டதுடன், ஐந்து பிரயாணிகள் கடுமையாகக் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

தடம்புரண்ட ரயில்வண்டி பாதையிலிருந்து அகற்றப்படும்வரை நேரடி ரயில் போக்குவரத்து வழமைக்குத் திரும்பமாட்டாது.

(8ம் பக்கம் பார்க்க)

★ யாழ். நவீன சந்தையில்

## முற்றுகையிட்டு சோதனைநடந்தது!

### இளைஞர்கள் விசாரிக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். நவீன சந்தைப் பகுதி நேற்றுக் காலை இராணுவத்தினரின் முற்றுகைக் குட்படுத்தப்பட்டு, பலத்த சோதனை இடப்பட்டபோது மூன்று இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிகின்றது.

யாழ். நவீன சந்தைப்பகுதியில் ஐஸ்கிறீம், குளிர்பானங்கள் அருந்திக்கொண்டிருந்த சுமார் 30 இளைஞர்கள் விசாரணை செய்யப்பட்டதுடன், அவர்கள் புகைப்படமும் பிடிக்கப்பட்டார்களாம்.

இச்சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, யாழ். நவீன சந்தைப் பகுதியில் உள்ள மக்கள் பீதியடைந்த நிலையில் காணப்பட்டனர்.

ஆயுதப் படையினர் நவீன சந்தையின் நாற்புறமும் காவல் காத்துநிற்க, இவ்விளைஞர்கள் விசாரணைக் குட்படுத்தப்பட்டனர்.

இவர்களுடன் ஐஸ்கிறீம் கடையில் வேலைசெய்யும் ஒருவரும் விசாரணைசெய்யப்பட்டாராம்.

இவ்விசாரணையின் போது ஆயுதப் படையினரின் உபயோகத்தில் உள்ள வான் ஒன்றுக்குள் மூடி மறைக்கப்பட்ட நிலையில் ஒரு நபருக்கு முன்பாக இவ்விளைஞர்கள் கொண்டு செல்லப்பட்டதாகவும் மூன்று இளைஞர்கள் மாத்திரம் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது

'ஹிப்பி' போல் முடிவளர்த்து பெல்ஸ் அணிந்திருந்த இளைஞர்களே அதிகமாக விசாரணை செய்யப்பட்டவர்கள்.

(மா)

## ஆயுதப்படையினர் தொடர்ந்து சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தின் சிலபகுதிகளில் 'ஹெலிகொப்டர்' வட்டமிட, ஆயுதப்படையினர் நேற்று சோதனை நடத்தினர்.

காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை போன்ற பகுதியில் ஆயுதப்படையினர் தொடர்ந்து பலத்த சோதனை நடாத்தி வருகின்றனர்.

குறிகாட்டுவானில் நடைபெற்ற இராணுவவீரர் துப்பாக்கிச்சூட்டுக் கொலை, துப்பாக்கி அபகரிப்பு போன்ற சம்பவங்களைத் தொடர்ந்தே, ஆயுதப்படையினர் சந்தேகத்துக்குரிய இடங்களில் சோதனை நடத்திவருகின்றனர்.

★ கச்சதீவு உற்சவம்

## பொருள்கள்கொண்டுசெல்ல தடை!

(யாழ்ப்பாணம்)

மார்ச் பதினேராம் திகதி ஆரம்பமாகவிருக்கும் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்துக்குச் செல்லும் யாத்திரீகர்கள் வியாபார நோக்கத்துடன் அதிகமான பொருள்களை அங்கு கொண்டு செல்வதற்கு இம்முறை தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாத்திரீகர்கள் கச்சதீவில் தங்கி நிற்கும் காலத்துக்கான அத்தியாவசிய தேவைக்கான பொருள்களைத்தவிர ஏனைய இறக்குமதிப் பொருள்களை எடுத்துச் செல்லக்கூடாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது

ஒரு யாத்திரிகர் 2 போத்தல் தேங்காயெண்ணெ, ஒரு பார் போப், ஒரு வாசனைசோப் மாத்திரமே கொண்டு செல்லலாம்.

குடிவகைகள் கொண்டு செல்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

**பெண்கள் அணியும் நகைகள்**

திருமணமான பெண் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான நகையும், திருமணமாகாத இளம் பெண் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையுமே அணிந்து செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் நடைபெற்ற மகாநாட்டிலேயே மேற்படி முடிவுகள் எடுக்கப்பட்டன என்று யாழ். மாவட்ட உதவிச் சுங்கச் சேகரிப்பாளரும், மேலதிக இறக்குமதி மேற்பார்வையாளருமான திரு. எஸ். எம். ஜே. சேனரத்ன நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, குறிகாட்டுவான், நெடுந்தீவு, மயிலிட்டி ஆகிய துறைமுகங்கள் மூலமாக யாத்திரீகர்கள் போய்வர அனுமதிக்கப்படுவார்கள். (மா)

## அதிகாரிகள் குழு 28-ல் புறப்படும்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு, உற்சவகால அரச சேவைகளை கவனிக்கும் பொருட்டு அரசாங்க அதிகாரிகள்குழு இம்மாதம் 28ம் திகதி கச்சதீவு செல்லவிருக்கின்றது.

அதேநேரத்தில் கச்சதீவுக்கு யாத்திரிகர்களை ஏற்றிச்செல்லும் படகுகளுக்கான உத்தரவுப் பத்திரங்கள் அடுத்த வாரம் வழங்கப்படும். உத்தரவுப்பத்திரங்களுக்கான வரி, படகுகளின் தரத்திற்குஏற்ப, பிரயாணிகளை ஏற்றும் தொகைக்கு ஏற்றதாக அறவிடப்படவிருக்கின்றன. 35 பிரயாணிகளை ஏற்றிச்செல்லக் கூடிய படகுகளுக்கு 35 ரூபாவும் அதற்கு மேற்பட்ட படகுகளுக்கு 45 ரூபாவும் வரியாக அறவிடப்படும்.

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, குறிகாட்டுவான், நெடுந்தீவு, மயிலிட்டி ஆகிய துறைமுகங்களிலிருந்து வழமை போல் இம்முறையும் யாத்திரீகர்களை ஏற்றிச்செல்ல பல படகுகள் உத்தரவுப்பத்திரத்

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஹோட்டலில் இராணுவம் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஒரு ஹோட்டலில் நேற்றுக் காலை இராணுவத்தினர் திடீர் சோதனை நடத்தினர்.

குறிகாட்டுவன் சம்பவம் சம்பந்தமாக துப்பறியும் பொருட்டே மேற்படி ஹோட்

(8 பக்கப் பார்க்க)

### அமெரிக்க செனட்டருக்கு சிறைவாசம்!

வாஷிங்டன் பெப் 17 கைலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டின் பேரில் அமெரிக்க செனட்டரொருவருக்கு 3 வருடசிறைத் தண்டனையும், 50,000 டாலர் அபராதமும் நீதிமன்றத்திஞல்விதிக்கப்பட்டது.

திரு. ஹரிசன் வில்லியம் என்ற அமெரிக்க செனட்டருக்கே இத்தண்டனை வழங்கப்பட்டது.

## பக்தவத்சலம் சுகவீனம்

சென்னை, பெப். 17 தமிழ்நாடு முன்னுள் முதலமைச்சர் திரு. சி. பக்தவத்சலம் சுகவீனம் காரணமாக சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(வெ)

### மணிவாக்கு

ஞானம் ஆண்மகன் ஒருவனையொத்தது. பக்தி பெண்மணி ஒருத்தியைப்போன்றது. கடவுளுடைய உள்ளத்தின் நுழைவுப் பகுதியில் உள்ள அதிதி விடுதி வரையிலும் செல்லத்தான் ஞானத்திற்கு அதிகாரம் உண்டு. ஆனால் ஆண்டவனுடைய அந்தப்புரப்பகுதிகளுக்கு பக்தியானது செல்லக்கூடும்.

— ஸ்ரீராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## மின்னுவதெல்லாம் பொன்னு?

அரசாங்கத்தின் ‘பகட்டு’ முயற்சி மூலம் நாட்டின் பொருளாதாரம் வீணடிக்கப்படுகிறது என்று இலங்கை மத்தியவங்கியின் பதில்ஆளுநரான டாக்டர் எச். என். எஸ். கருணதிலகா ஒரு பகிரங்கக்கூட்டத்தில் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

மத்தியவங்கியின் நிபுணர்கள் நாட்டின் பொருளாதாரம் பற்றிச் சொல்வதெல்லாம் வேதவாக்கல்ல என்பது எமக்குத் தெரியும். ஆனால் அந்த உண்மையில் — அரசாங்கம் தனது ‘பேயாட்டங்களை’ ஒளிக்க முயல்வது மடமையிலும் மடமையே!

அரசின் பகட்டுமுயற்சிகள் எங்கள் அறிவுக்கு எட்டாதவையல்ல; ஏன், சாதாரண ஏழைமக்களுக்குப் புரியாதவையல்ல வென்றே சொல்லலாம்.

1977ல் ஆட்சிக்கு வந்த ஐ. தே. கட்சி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் தலைமையில் பொருளாதாரத்துறையில் ஒரு புதிய பாதையைத் திறந்துவைத்தது. பலவேறு கட்டுப்பாட்டுக்களைக் களைந்தெறிந்து, வரிகளைக் குறைத்து தாராளமான இறக்குமதியை அனுமதித்து வெளிநாட்டு முதலீடுகளுக்கு உற்சாகமளித்து சுதந்திரவர்த்தக வலயம் மூலம் ஒரு சிறப்பான ஏற்றுமதிநிலையத்தைத் தயாரித்தது. சிங்கப்பூர் ‘ஸ்டைலில்’ எமது நாடு நிமிர்கின்றதென பலர் பெருமிதப்படத் தொடங்கினர்.

இந்தத் தீவிர துரித ஏற்பாடுகளுக்கு சர்வதேச நாணய நிதியும் உலகவங்கியும் பூரண ஆதரவு அளித்தன. இந்த நம்பிக்கையில் அரசு எல்லா நோய்களுக்கும் சிரஞ்சீவியென மதித்த மகாவலித்திட்டம் இவ்விரு ஸ்தாபனங்களின் பண உதவிபெற்றது. முப்பது வருடங்களில் பூர்த்தியாகுமென நினைத்த இவ்விராட்சத திட்டத்தை 10 வருடங்களில் முடித்துவிடலாமென்ற பகீரதப்பிரயத்தனத்தில் அரசுஇறங்கியது. 320,000 ஏக்கர் காணிக்கு நீர்ப்பாசனவசதியளிக்கக் கூடிய மின்சக்தி உற்பத்தித் திட்டம் 10 லட்சத்துக்கு மேலானபேருக்கு வேலையளிக்கவும் நாடு உணவில் தன்னிறைவுகாணவும் வழிவகுக்குமென அது ‘கோட்டை’ கட்டிற்று.

1979ம் ஆண்டு பிற்பகுதியில் ஆரம்பமான வீழ்ச்சி, மலையிலிருந்து ஒருவர் விழுவதுபோல் இன்றுவரைக்கும் மோசமானநிலையையே நாடி நிற்கின்றது.

எடுத்தமுயற்சிகள் எல்லாவற்றையும் பணவீக்கம் பாழாக்கியது. 1980ல் 34 சதமாக உயர்ந்த பணவீக்கம் 20 கோடி ரூபா பற்றாக்குறையை ஏற்படுத்தி அதனை நிவர்த்தி செய்ய மேலதிக பட்ஜெட் ஒன்றை வருவித்தது மக்கள் மறந்திருக்கமாட்டார்கள். 1981ல் துண்டு விழும் தொகை 150 கோடியானால் இவ்வருடம் எவ்வளவு அதிகரிக்குமென நினைக்கவே நடுக்கம்.

அரசாங்க ஊழியர் சம்பள அதிகரிப்புப்போன்ற பாரிய நிதி தேவைகள் இன்னும் காத்திருப்பதால் கற்பனைக்கெட்டாத வகையில் கடனாளியாகவே நாடு கேடான பாதையில்சென்று கொண்டிருக்கிறது.

ஆரம்பித்த பெருமுயற்சிகளெல்லாம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமானவென்பதை கடன் வழங்கும் ஸ்தாபனங்களே கண்டிக்கத்தொடங்கின. அத்துடன் வாக்குப் பண்ணிய உதவியையும் ‘வாபஸ்’ பெறும் நிலையில் இருப்பதாக அஞ்ச இடமுண்டு.

புதிய தலைநகரம், புதிய பாராளுமன்றம், பிரமாண்டமான வீடமைப்புத்திட்டம் இம்மூன்றும் முக்கியமாக கண்டனத்துக்குள்ளானதென செய்திகள் கூறுகின்றன. நியாயமே!

சுதந்திர நாடு ஒன்று இவ்வளவு தூரம் கடன்பட்டு நாம் உலகின் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் மகேந்திராபுரியெனப் பிரசாரம் செய்வது டாம்பீக மனப்பாங்கையே காட்டுகின்றது.

டாம்பீக வாழ்வு கொண்டு வரும் தாழ்வு. இதனை எதிர்காலத்தில் அனுபவிக்கவிருக்கும் இன்றைய இளைஞர்கள் இன்று ஏமாந்துவிடுகின்றனரா? சந்தேகம். பார்க்குமிடமெல்லாம் பகட்டு. மின்னுவதெல்லாம் பொன்னல்ல வென்பதை இன்றைய மக்கள் பலர் உணர முடியாத வகையில் சிக்கன வாழ்வு கைவிடப்பட்டு வெளிநாட்டு வருமானத்தில் நம்பி வாழ்வோர் நடமாடும் இடமெல்லாம் போலி வாழ்க்கை முறையைப்பரப்பி வருகின்றனர்.

போரில் போட்டியிட்ட அரசுகள் முடிவில் கைமாறின காலனியாக விருந்த இலங்கை மீண்டும் கடனாளியாக அடகு நிலையை அடைவதா?

அரசும் மக்களும் குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடி குழியில் விழும் நிலையில் இருப்பதை அறிந்து ஆவன செய்வதே இன்றைய அவசிய பணி.

கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமா? என்பதே மத்திய வங்கி அதிகாரியின் கூற்றுக்கு நாமளிக்கும் விமர்சனம்.

யாழ். வைத்தீஸ்வராவில் இன்று

# இராமகிருஷ்ணர் ஜயந்தி விழா

தர்மமும் தர்ம ஸ்தாபனங்ளும் நலிவுற்ற காலங்களில் எல்லாம் அவற்றைக்காக்க அவதரித்த ஆசாரியர்கள் அநேகர் அவர்கள் வரிசையிலே எளிமையும் அருளும் ஏற்றமும் பெற்று பன்மீன்நடுவண் பான் மதிபோல விளங்குபவர் பகவான் ஸ்ரீஇராமகிருஷ்ண பரமகம்ஸர். அவரது எல்லையற்ற பெருமையை உலகறியச்செய்தனர் அவரது பிரதம சீடராகிய சுவாமி விவேகாநந்தரர்

சிறுபிராயந்தொட்டே எல்லாரிடத்தும் அன்பு, அருள், சாந்தம், சீலம் முதலாம் நற்குணங்கள் இவரிடம் காணப்பட்டன. அப்பால்ய பருவத்திலேயே எதுவித சாதிபேதமும் பாராட்டாது சகல குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடுவதன் மூலம் எல்லோரும் இறைவனின் குழந்தைகளே என்ற பேருண்மையை கற்றோரும் மற்றோரும் அறியச்செய்தார். அதுமட்டுமன்றி அவரது ஒன்பதாவது வயதிலே உபநயனம் ஆனதருணத்தில் உயர் குலப்பெண்ணிடம் பிச்சை யேற்கும் வழக்கத்தை மீறியடித்து பிடிவாதமாக நின்று தாழ்ந்த குலப்பெண்ணிடம் பிச்சையேற்று தமது சமதர்ம திருஷ்டியை அச்சிறுபிராயத்திலேயே காட்டினார்.

மு. இராமலிங்கம்

சந்நியாசிகளைக்கண்டால் கதாதரர் மட்டற்ற மகிழ்ச்சி அடைவார். அவர்களுடன் நெருங்கிப்பழகி தம்மாலான பணிவிடைகள் செய்வார். ஒருநாள் அன்னை சந்திரமணி தேவி கொடுத்த கோடிவஸ்திரத்தை அணிந்து சென்ற கதாரர் ஜெகந்நாதத்துக்கு யாத்திரை சென்ற சாதுக்கள் கௌபீனதாரிகளாக இருக்கக் தானும் அவ்வாறிருக்கத்தீர்மானித்து புத்தம் புதிய வஸ்திரத்தை துண்டு துண்டாகக் கிழித்து கௌபீனம் தரித்துக் கொண்டார். சிறுபிராயத்திலே அவர் உலகப்பற்றைத் துறந்தார் என்பது இதிலிருந்து ஓரளவு புலனாகும். கதாதரர் தமையனார் ஏற்படுத்திக் கொடுத்த கலாசாலைப்படிப்பு வெறும் வயிற்றுப்பிழைப்புக்கானதே எனக்கூறி அதனை ஏற்க மறுத்து விட்டு ஈசுவர விசாரத்தில் ஈடுபடலானார்.

கல்கத்தாவில் அர்ச்சகராகக் கடமை புரிந்த காலத்தில் தம்மை மறந்த நிலையில் தெய்வப்பித்தேறி ஜகந்மாதாவைத் தன்முன் பிரசன்னமாகி அருள் புரியுமாறு வேண்டி நின்றார். அன்னை அருள் புரியாததுகண்டு அயர்ச்சி அடைந்த கதாதரர் தன் உயிரை மாய்க்க எத்தனித்த தருணம் அது கண்டு பொறுக்காத அன்னை பராசக்தி ‘‘குழந்தாய், நீகூப்பிடும்போது எல்லாம் நான் வருவேன்’’ என்று அருளிமறைத்தார் இது கண்டும் கேட்டும் களிபேருவக கொண்ட கதாதரர் சாந்தமும் சமாதானமும் அடைந்தார்.

நிர்விகல்ப ஸமாதி அடைவதற்கு இவர் பன்னிரண்டு வருடம் கடுந்தவம் புரிந்தார். அக்காலத்தில் சில வேளைகளில் தாழ்ந்த ஜாதியர் வீடுகளிற் சென்று துடைப்பம் எடுத்து வீடுபெருக்குவார். சில காலத்தின் பின்னர் தோதாதிரி மகானிடம் வேதாந்த இரகசியங்கள் அனைத்தையும் உபதேசம் கேட்டார். மகான் நாற்பது வருடங்களில் அதிசிரமத்தின்பேரில் பெற்ற நிர்விகல்ப ஸமாதியை கதாதரர் மூனறே நாட்களில் பெற்று அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். ஆறுமாதகாலம் நிர்விகல்ப ஸமாதியில் இருந்தமையால் இரத்தக்கடுப்பு வியாதி உண்டாயிற்று நோய் குணமானதும் வைஷ்ணவ சித்தாந்தத்தை அனுசரித்து ஈசுவரனை ஆராதித்துப் கிறிஸ்தவ முகமதிய மதமுதலான இதர தர்மங்களையும் கொஞ்சம் கொஞ்சக்காலம் அனுசரித்து தமது இஷ்டசித்திகளைவெகுவிரைவில் பெற்றார், ஈற்றில் எல்லா மதங்களும் கூறும் உண்மை ஒன்றே என்றும் சச்சிதாநந்தப்பிரமம் ஒன்றே என்றும் வெவ்வேறு மதங்கள் அப்பிரம்மத்தை தேடிஅடையும் மார்க்கங்களே என்றும் கண்டு கூறினார்.

அரிய பெரிய தத்துவங்களையும் சிறு சிறு உபகதைகள் மூலம் எளிதாக்கி விளக்கும் அவரது தலைசிறந்த உத்தியைக் கையாண்டு அருளிய மணிமொழிகள் அத்தனையும் நெஞ்சக்கனகல்லையும் நெகிழ்ந்துருக வைக்கும் ஆற்றலுடையனவாம்.

‘‘எல்லாரிடத்தும் ஈசுவரன் இருக்கிறான், ஆனால் ஈசுவரனிடத்தில் எல்லா மக்களுமில்லை, இதுவே அவர்கள் துன்பத்திற்குக் காரணம்.’’

‘‘ஆத்மீக அபிவிருத்திக்கு இடையூருக இருக்கும் காமம் தான் மாயை’’

‘‘சச்சிதானந்தமாகிற விருஷத்தில் இராமர்கள், கிருஷ்ணர்கள், புத்தர்கள், கிறிஸ்துக்கள், நபிகள் முதலியோராகிய பூங்கொத்துக்கள் கணக்கற்றுத் தொஙகுகின்றன. அவர்களுள் இரண்டொருவர் பூமியில் அவதரித்து பிரமாண்டமான மாறுதல்களையும் வேறுபாடுகளையும் உண்டாக்குகின்றனர்.’’

‘‘படகு தண்ணீரில் இருக்கலாம், ஆனால் தண்ணீர் படகில் இருக்சக்கூடாது ஆத்மார்த்தி உலகத்தில் இருக்கலாம், ஆனால் உலக ஆசை அவனிடத்தில் இருக்கக்கூடாது

‘‘பணம் எவனுக்கு அடிமையோ அவன்தான் உண்மையான மனிதன். பணத்தை எப்படி உபயோகிக்கிறதென்பதை தெரிந்து சொள்ளாதவர்கள். மனிதர்கள் என்ற பெயருக்கே அருகரல்லர்.’’

## குருதிமலைபற்றி நடந்த ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

தகவம் ஆதரவுடன் குரும்பசிட்டி சன்மார்க்கசபையில் தி. ஞானசேகரனின் ‘குருதிமலை’ நாவல் ஆய்வுக்காக கடந்த வாரம் எடுக்கப்பட்டது. 41 கற்றறிந்த வல்லுநர்சங்கமித்த இக்கூட்டம் கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்றது.

பிரபல விமர்சகர் மு.நித்தியானந்தன் பேசும்போது, முன் வெளிவந்த மலையக நாவல்கள் யாவும் கடந்த கால சரித்திரத்தை பிரதிபலிப்பன, ஆனால் குருதிமலைதான் முதலாவது சமகாலத்தைப் பிரதிபலிக்கும் நாவலாக மிளிர்கிறது’ என்றார். இந்த நாவலை மலையகத்தைச் சேராத ஒருவர் எழுதியது பாராட்டப்படவேண்டியதே என்றார். நாவலாசிரியர் எவ்வித கோட்பாட்டுக்குள்ளும் அமையாமல் சமூகத்தைப் பார்க்கிறார்கள். மிக யதார்த்தமாக இதைப்படைத்துவெற்றி கண்டுள்ளார், மலையக மக்களின் போராட்டம்அந்த மண்ணிலேதான் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நடப்பியல் மெய்மை சிறப்பாக காட்டப்பட்டுள்ளது. ஈழத்து மிக முக்கியநாவல்களில் குருதிமலை ஒன்று என்றார் நித்தியானந்தன் திரு. அகஸ்தியர் பேசும்போது மிகயதார்த்தமாக அமைந்த இந்த நாவல் எதிர்காலத்துக்கு நம்பிக்கை ஊட்டத்தக்கதாய் அமையவில்லை. என குறிப்பிட்டார் ‘குருதிமலை’ ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட வேண்டுமென்றார் திரு. சண்முகசுந்தரம் நாவலன் கடைசிப்பந்தியின்குறிப்பு என்ற தலைப்பில் அமைந்தால் நல்லது என திரு. உமாமகேஸ்வரன் குறிப்பிட்டார். இதுவரை வந்த சிறந்த நாவல்களில் ஒன்ருக ‘குருதி, மலையை குறிப்பிடலாம் என்றார். திரு சுப்பிரமணிய ஐயர் நூலாசிரியரும் பேசினார்கள் திரு. த. இராசரத்தினத்தின். நன்றியுரையுடன் ஆய்வரங்கு முடிவுற்றது.

## இலவச கண் சிகிச்சை முகாம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை லயன்ஸ் கழக ஆதரவில் இம்மாதம் 25ம் 28ம் திகதிகளில் கண்ணில் ஏற்படும் கற்ருக்ஸ் நோய்க்கான சத்திர சிகிச்சைகள் இலவசமாக நடத்தப்படவிருக்கின்றன.

இவ் இலவச கற்ருக்ஸ் சத்திரசிகிச்சையை டாக்டர் திருமதி இந்திரா சிவயோகம் தலைமையிலான டாக்டர்குழுவினர் மேற்குறிப்பிட்ட தினங்களில் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மேற்கொள்ளவிருக்கின்றனர்.

இச் சத்திரசிகிச்சைகளுக்கு நோயாளரைத் தேர்ந்தெடுப்பதற்கான முகாம்கள் தற்போது நடத்தப்பட்டுவருகின்றன.

இம்மாதம் 20ம் திகதி காலை குடாரப்பிலும் (நாகர்கோவில் அ. த. க. பாடசாலை அருகில்) மாலை நாகர்கோவில் (நாகர் கோவில் ம. வி. அருகாமையில்) 21ம் திகதி காலை அல்வாய் இன்பருட்டி, சக்கோட்டை (அல்வாய் முத்துமாரியம்மன் கோவிலடி) மாலை திக்கம் பொலிகண்டி (திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயத்துக்கு அருகாமையில்) 22ம் திகதி காலை முழுநாளும் அச்சுவேலி (டாக்டர் சந்திரபாலா வைத்திய நிலையம் அச்சுவேலி பருத்தித்துறை] அரசினர் வைத்தியசாலை மந்திகையிலும் நோயாளரை தேர்ந்தெடுக்கும் முகாம்கள் நடத்தப்படும்.

(கி)

## குறைவான எண்ணிக்கை

(வவனியா)

கல்வியிலேயே மிகவும் பின் தங்கிய மாவட்டங்களில் வவனியாவும் ஒன்ருகவிருந்த போது கடந்த 13ம் திகதிஆசிரியர் பதவிக்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் இம்மாவட்டத்தில் உள்ளவர்கள் மிக மிகக் குறைவாகவேவிருந்தது.

பெரும்பாலான பரீட்சாத்திகள் வெளிமாவட்டத்திலிருந்து வந்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

தமிழ் மகாவித்தியாலயம் இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயங்களில் பரீட்சை நடைபெற்றது.

## "அரசுடனான அடுத்த சந்திப்பில் அபிவிருத்தி சபைகளின் அதிகாரங்கள் வரையறுக்கப்படும்"

### தெல்லிப்பழையில் 'அமிர்' தகவல்

(மாவிட்டபுரம்)

''அரசாங்கத்துடன் இடம்பெறவுள்ள அடுத்த சந்திப்பில் மாவட்ட அபிவிருத்திச்சபையில் அதிகாரங்கள் வரையறுக்கப்படும் என எதிர்பார்க்கிறோம். அமைச்சுகளது அதிகாரங்களை அபிவிருத்திச்சபைக்கு வழங்குவது குறித்து தீர்க்கமாக முடிவு எடுக்கப்படும். எமது கையில் கிடைக்கும் அதிகாரங்களைக் கொண்டு எமது தமிழ்ப்பகுதிகளை முன்னேற்ற திட்டமிட்டு செயல்படுவோம்''.

இவ்வாறு தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பலாலிக் கிளைக்கான புதிய கட்டிடத்தை திறந்து வைத்துப் பேசிய எதிர்க்கட்சி முதல்வரும் காங்கேசன்துறை பிரதிநிதியுமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. எஸ். சிவமகாராஜா தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த எமது பழங்குடியினர் குடிபெயர்வறிய நிலையில் படையெடுப்போ, இயற்கை மாறுபாடுகளோ இன்றி சரியானதோர் அமைப்பின் கீழ் வாழ்ந்ததாக புறநானூறு கூறுகிறது. ஆனால் நாமே தென்னிலங்கையிலும், வெளியிடங்களிலும் வேலைதேடிச்சென்று பலமுறை அடிவாங்கி சொத்துக்களைப் பறிகொடுத்து பரிதவித்து ஓடிவரும் நிலையிலிருக்கிறோம். இந்த மணியோடர் வாழ்க்கை முறைக்கு முடிவு கட்டவேண்டியது அவசியமாகும். எமது சொந்த மண்ணில் தலை நிமிர்ந்து வாழக்கூடிய நிலையை ஏற்படுத்தவேண்டும். மாவட்ட அபிவிருத்திச் சபை மூலம் செய்யக்கூடிய திட்டங்களை நாம் வெற்றிகரமாக செயல்படுத்தி எமது நிலையை உயர்த்திகொள்ளவேண்டும்.

எமது விவசாயிகள் தக்காளிப்பழங்களை லொறிகளில் ஏற்றி கொழும்புக்கு கொண்டு செல்லும் நிலையிலேயே இருக்கிறார்கள். ஆனால்அவர்களுக்கு நியாய விலை கிடைக்கிறதா? என்பது சந்தேகமாகவே உள்ளது இத்தக்காளிப்பழங்களை இங்கேயே உபயோகித்து ஜாம் போன்ற பொருட்களை உற்பத்தி செய்வதற்காக தொழிற்சாலைகளை அமைத்தால் எமது தொழில் வளமும் பெருகும். தக்காளிப்பழத்திற்கும் நியாய விலை கிடைக்கும், இதற்கும் நாம் ஆவன செய்யவேண்டும்' என்றார்.

மக்கள் வங்கி பிரதிநிதி திரு. வே. மகேந்திராஜா பேசுகையில் கூறியதாவது:

1967ம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட விவசாயக் கடனை இன்னும் பலர் செலுத்தாமல் உள்ளனர். இக்கடன்களை கூட்டுறவுச் சங்கங்களே மக்கள் வங்கியின் முகவர்களாக இருந்து பெற்றுக்கொடுத்தன, ஆனால் இவற்றை மீளச் செலுத்தாமையால் கூட்டுறவுச்சங்கங்களுக்கு தொடர்ந்து கடன் வசதிகளை செய்துகொடுக்கமுடியாமலுள்ளது. ஆகவே விவசாயிகள் இக்கடனை மீளச் செலுத்தி கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கு உதவுவதுடன் 9 வீத வட்டிக்கு தொடர்ந்தும் தாங்கள் விவசாயக் கடனை பெற்றுக்கொள்ளக் கூடிய நிலைமை உருவாக்க கவண்டும்'' என்றார்.

மற்றும் சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். ஜெயகாந்தன், கூட்டுறவு ஆணையாளர் திரு. ச. ஞானப்பிரகாசம், தேசிய கூட்டுறவு சபை செயலாளர் திரு. சு. சிவசுப்பிரமணியம் உட்பட பலர் பேசினர்.

---

## பலாலி விமான நிலையத்தில் என்ன நடந்தது?

(யாழ்ப்பாணம்)

கடந்த வியாழக்கிழமை இரவு பலாலி விமானப்படை தளத்தின் ஓடுபாதையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய மூன்று நபர்கள் மீது விமானப்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததையடுத்து அவர்கள் அங்கிருந்தும் தலைதெறிக்கஓடி ஜீப் வண்டியொன்றில் தப்பிச்சென்றதாக விசாரணையின் போது தெரியவந்துள்ளதாக ஆங்கில தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை குறிகாட்டுவானில் இடம்பெற்ற இராணுவ வீரர்மீதான துப்பாக்கிப் பிரயோகத்துக்கும், பலாலி விமானத் தளத்தில் காணப்பட்ட மர்மமான நடமாட்டத்துக்குமிடையே தொடர்புகளேதும்இருக்குமா? வென ஆராய்வதற்காக பாதுகாப்புச்சேவையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும் விமானப் படைஉயர் அதிகாரிகளும் பலாலி விமானத்தளத்துக்கு வந்துள்ளதாகவும் அச்செய்தி கூறுகிறது.

ஓடுபாதையில் சேதம் விளைவிப்பது அல்லது விமானப் படைதளத்திற்கு ஏதும் அசம்பாவிதத்தை ஏற்படுத்துவதே அங்கு மர்மமான முறையில் நடமாடியோரது நோக்கமாக இருந்திருக்கலாமென்றும் அச்செய்தி மேலும் தெரிவிக்கிறது. (கி)

---

"அரசியல் விடுதலைக்காக மட்டுமல்ல

## பொருளாதார வளத்துக்காகவும் நாம் உழைக்க வேண்டும்"

### மயிலிட்டியில் எதிர்க்கட்சித் தலைவர்

(மாவிட்டபுரம்)

''இந்திய சுதந்திரப்போராட்ட காலத்தில் சுதந்திரப் போராட்டம் ஒரு புறமும், மறுபுறமும் சுதேசிய உற்பத்தியில் கவனம் செலுத்தி கைத்தறி, விவசாயம் போன்ற பல துறைகளையும் வளர்த்து வந்தமையால்தான் இந்தியா சுதந்திரம் பெற்ற பின் சீரழியாமல் தனது சொந்தக்காலில் நிற்க முடிந்தது, ஆகவே தான் நாமும் அரசியல் விடுதலைக்காக மட்டும் போராடாமல் எமது பொருளாதார வளத்தையும் அதிகரிப்பதற்கு உழைக்கவேண்டும், அதற்கு கூட்டுறவு இயக்கத்தை சிறந்த சாதனமாக பயன்படுத்திக் கொள்ளமுடியும்''

இவ்வாறு தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மயிலிட்டி வடக்குக் கிளையின் புதிய கட்டிடத்தை திறந்து வைத்துப் பேசிய எதிர்க்கட்சி முதல்வரும், காங்கேசன்துறை எம். பி. யுமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. எஸ். சிவமகராஜா தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

ஒரு இனத்தின் வாழ்வில் அரசியல் சுதந்திரத்திற்காக போராடும் அதே நேரத்தில் பொருளாதார சுதந்திரத்திற்காகவும் உழைக்கவேண்டியுள்ளது. அரசியல் சுதந்திரமும் பொருளாதார சுபீட்சத்திற்கே என்பதை நாம் உணரவேண்டும். ஏழைகள் வாழ்வு மலராது விட்டால் அரசியல் சுதந்திரம் கிடைத்தும் பயனில்லை என அமரர் நேரு கூறினார்.

நாம் தனிப்பட்டமுறையில் எமது பொருளாதாரவளத்தை வளர்த்துகொள்ள முடியாமலிருக்கிறது. எமது மக்கள் கொழும்பிலேயே திரும்பத் திரும்ப முதலீடுசெய்கிறார்களே தவிர எமது பகுதிகளில் முதலீடுசெய்ய முன்வருவதில்லை. சில சமயங்களில் இங்கு ஏதாவது ஒரு தொழிலைஆரம்பித்து பின் அதனை மூடிவிட்டு கொழும்பு சென்றுவிடுகிறார்கள். ஆகவே தனிப்பட்ட தொழில்துறைகளை நாம் நம்பிச்செயல்படமுடியாதுள்ளதால் பல நோக்குக்கூட்டுறவுச்சங்கங்களை வளர்த்துஅதன் மூலம்பொருளாதாரவளத்தை பெருக்கமுடியும்.

கடந்த 35, 40 ஆண்டுகளாக அரச உதவிகளைப்பெற்று கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கின. பங்கீட்டு உணவு விநியோகம், விசேட கோட்டா வசதிகள் என்று உதவிகள் கிடைத்தன. ஆனால் இன்று கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை என்ற நிலையையே அரசு ஒழித்துவிட்டது. தனியார் துறைக்கு ஊக்கம் அளிப்பதாலும், பங்கீட்டு உணவு நிறுத்தப்பட்டதாலும் கூட்டுறவுச் சங்கங்கள் பாதிப்படைந்துள்ளன. தாராள இறக்குமதிக் கொள்கையினால் மின்தறி, நெசவு ஆலை தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதில் கஷ்டம் நிலவுகிறது. இருந்தபோதும் கடந்த 4 ஆண்டுகளில் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக இயங்கிவளர்ச்சி பெற்றுள்ளது பாராட்டத்தக்கது.

கூட்டுறவுஇயக்கம் மக்களது இயக்கமாகும். மக்கள் ஒருமித்து செயல்பட்டால் இதனை ஒருபோதும் அழிக்க முடியாது என்பதை இன்று உணரமுடி

(4ம் பக்கம் பார்க்க)

---

1,71,000 ரூபா துஷ்பிரயோகம்:

## நீதிமன்றப் பதிவாளர் மீது வழக்கு

(கோட்டை)

கோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் அபராதத்திலிருந்து பெறப்பட்டும், பாதுகாப்புச்கருதியும் வைக்கப்பட்டிருந்த ஒரு லட்சத்து எழுபத்தோராயிரம் ரூபாவை துஷ்பிரயோகம் செய்ததாக மேற்படி மன்றின் பதிவாளர் எஸ். எ. மகாதேவாமீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரகசியப் பொலிஸார் சந்தேகநபரான மகாதேவாவை கோட்டை நீதவான் திரு. கீர்த்தி விஜேவர்த்தன முன்னிலையில் ஆஜர் படுத்திய போது அவரது சட்டத்தரணி கேட்டுக்கொண்டதன் பேரில் நீதவான் இரண்டுலட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

வழக்கு விசாரணை மார்ச் மாதம் வரை ஒத்திவைக்கப் பட்டுள்ளது. (கி)

---

## 64 சிமெந்து மூடைகள் கைப்பற்றப்பட்டன

(புலோலி)

சுன்னாகத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 64 சிமெந்து மூடைகள் யாழ். உதவி உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்டது.

சுன்னாகத்திலுள்ள கடையொன்றில் சிமெந்து மூடைகள் பதுக்கிவைக்கப்பட்டிருப்பதாய் பாவனையாளர்களிடமிருந்து கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து யாழ். உதவி உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் திரு. ரி. மார்க்கண்டு தலைமையில் சென்ற விலைக் கட்டுப்பாட்டதிகாரிகள் குழு அக்கடையில் பதுக்கி வைக்கபட்டிருந்த69சிமெந்து மூடைகளைக் கைப்பற்றியது.

கைப்பற்றப்பட்ட சிமெந்து மூடைகள் அரசாங்க அதிபரின் உத்தரவின்பேரில் உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இச்சிமெந்து மூடைகள் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தெல்லிப்பழையில் பொருட்களை விலைகூட்டி விற்பனைசெய்த இரு வர்த்தகர்களும் இக்குழுவினரிடம் அகப்பட்டுக்கொண்டனர்.

---

## "சுயதொழிலில் ஈடுபட்டு வருவாயைப் பெருக்க வேண்டும்"

### - பருத்தித்துறைஎம்.பி.

(புலோலி)

''எமது இளைஞர்களும், யுவதிகளும் அரசாங்க உத்தியோகத்தை எதிர்பார்த்து ஏமாற்றமடைவதை விடுத்து சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடவேண்டும். அப்போது தான் குடும்பவருவாயை உயர்த்திக் கொள்வதுடன் கிராமியப் பகுதிகளையும் அபிவிருத்தியடையச் செய்யமுடியும்.''

இவ்வாறு பருத்தித்துறை தும்பளையில் தையல்பயிற்சி நிலையமொன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பருத்தித்துறை எம். பி திரு. கே. துரைரத்தினம் குறிப்பிட்டார். திரு. பி கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இத்தையல் பயிற்சிநிலையத் திறப்பு விழாவில் தொடர்ந்து உரையாற்றிய எம். பி. துரைரத்தினம் குறிப்பிட்டதாவது:

கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளில் பெண்களின் பங்கு மிக முக்கியமானது. பெண்கள் தொழிற்பயிற்சிகளைப் பெற்றுச்சுய தொழிலில் ஈடுபடுவதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையிலேயே இன்று இங்கு இத்தையல் பயிற்சி நிலையம் திறந்துவைக்கப்படுகின்றது. இதுபோன்ற வசதிகளைப் பெண்கள் முழுமையாகப் பயன்படுத்தத் தவறக்கூடாது.

பருத்தித்துறை நகரசபை உப தலைவர் டாக்டர் எஸ். வேல்முருகு உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''கிராமங்களின் அபிவிருத்தி அக்கிராமக்களின் கைகளில் தான் தங்கியுள்ளது. எனவே கிராமிய மக்கள் சிறப்பாக இயங்கி தமது கிராமங்களைஅபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும். பெண்கள் தையல் தொழிலில் பயிர்சிபெற்றிருக்க வேண்டியது முக்கியமாகும். இன்று இங்கு ஆரம்பித்துவைக்கப்பட்டிருக்கும் தையல் தொழில் பயிற்சி நிலையம் இப்பகுதி பெண்களுக்கு பெருநன்மை பயக்கக்கூடியதாகும்.''

தும்பளை கிராமசேவை அலுவலர் திரு. வி. சேதுநாயகம் உரையாற்றுகையில் ''எமது பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நாம் மற்றவர்களை நம்பியிராது சுயமுயற்சி மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இதில் இளைஞர், யுவதிகளின் பங்கு மிக முக்கியமானது. இளைஞர், யுவதிகளுக்குத் தொழிற்பயிற்சிகளை அளிப்பதற்கு மேலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார்.

இத்தையல் பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சிகளை மேற்கொள்வதற்கென பதினேழு படித்தஇளம்பெண்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பருத்தித்துறை எம். பி. யின் முயற்சியால் இத்தையல் பயிற்சி நிலையத்திற்கு இரண்டுதையல் மெசின்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்தையல் பயிற்சி நிலையத்தின் ஆசிரியையாக வயலட். செந்திமணி நியமிக்கப்பட்டுள்ளார்.

---

## நிர்வாகிகள் தெரிவு

(நயினாதீவு)

நயினாதீவு ஸ்ரீ பிடாரி அம்பாள் சனசமூக நிலைய அங்குரார்ப்பணக்கூட்டத்தின்போது பின்வருவோர் நடப்புவருட நிர்வாகத்தினராக தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் சி. நா. கணேசு இணைச்செயலாளர்கள் தி. நடனசிகாமணி, பொ. அகிலானந்தன், பொருளாளர் சா. மகாதேவா

இன்று தம்பர் நினைவு தினம்

# நாடிவந்தோருக்கு ஆலோசனை கூறும் ஞானியாக விளங்கினர்

யாழ்ப்பாணத்தி லுள்ள பிரதான வீதியின் 95ம் இலக்கம் யாழ் நகரின் மத்தியில் அமைந்திருப்பது மட்டுமன்றி பல ஆண்டுகாலமாக இந் நகரின் அரசியல் வாழ்வின் மையஸ்தானமாகவும் விளங்கியுள்ளது. புத்திக்கூர்மையும் நாட்டிலுள்ள அதிமுக்கியஸ்தர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவருடைய ஆலோசனையையும் உதவியையும் பெறுவதற்காக அரசியல்வாதிகளும் பொதுவாழ்வில் ஈடுபட்டவர்களும் செல்வது வழக்கமாகவிருந்தது. இதைவிட தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள அல்லல்களை ஆராய்ந்து ஒரு வழிகாண்பதற்காக இந்த ஆலோசக ஞானியான திரு. ஏ. ஈ. தம்பரிடம் செல்வதுண்டு. நியாயமும், தன்னலமற்ற தன்மையுமுடையவராக மக்களிடம் பழகிவந்தார். ஏனெனில் எவ்வளவு ஆத்திரமூட்டக்கூடிய சந்தர்ப்பமாக விருப்பினும் ஒரு கூட்டத்திலோ அல்லது தனிப்பட்ட உரையாடலிலோ அவர் கோபம்கொண்டதையும் கடுஞ்சொற்கள் உபயோகித்தமையையும் நான் கண்டதில்லை

இத்தகைய பெரியார் நம்பிக்கையில்லாதவராக இருக்க முடியாது. உண்மையில் காலம் செல்லச் செல்ல நாட்டின் நிலையைப் பற்றி அவரது உள்ளத்திலேயே ஒரு தளர்ச்சி படிப்படியாகத் தோன்றியது. சில மாதங்களுக்கு முன்னர் அவர் எனக்கு எழுதிய கடிதத்தில் 'அரசியலில் நான் அதிகம் ஈடுபாடு அற்றவனாக குறிப்பாக தமிழரது அரசியல் விடயம்பற்றி ஈடுபாடற்றவனாக இருக்கிறேன். 50 வருட காலமாக இத் தலைவர்கள் மக்களை பிரயோசனமற்ற வழியில் செலுத்திவந்திருக்கிருர்கள். இப்போதும் கூட அத்

**-கு.நேசையா-**

தலைவர்கள் சாதாரணமானவர்களது அறிவுரைகளுக்குச் செவிசாய்க்கமாட்டார்கள் என்று குறிப்பிட்டிருந்தார்.

நான் முதன்முதலாக திரு. ஏ. ஈ. தம்பரை 1920ம் ஆண்டில் மாணவர் மகாநாட்டில் சந்திக்கநேர்ந்தது. இந்த இயக்கம் அநேக ஆர்வமுள்ள இளைஞர்களை ஒன்ருக இணைத்தது. கலைப்புலவர் நவரத்தினத்தை நடுவராகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட கலாநிலையம் எங்கள் தோழமைக்கு மேலும் வலுவூட்டியது.

திரு.ஏ.ஈ.தம்பர் விஞ்ஞான ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி முன்னாள் அதிபர், மத்திய கல்வி ஆலோசனைக் குழுவின் சில ஆண்டு அங்கத்தவர். கூட்டுறவுத் தலைவர், கலை விமர்சகர், இந்து தத்துவ மாணவன், இத்தகைய பல்வேறு துறைகளிலும் ஈடுபாடு உடையவராக விளங்கினர். ஆனல் இவை எல்லாவற்றையும்விட ஆசிரிய உலகத்திற்கு மாபெரும் தொண்டாற்றியுள்ளாரென நான் நினைக்கிறேன். 1947ம் ஆண்டு வடமாகாண ஆசிரியர்சங்கத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டு அடுத்த ஆண்டே அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். மறுபடியும் அடுத்து மேலும் இருவருடங்களுக்கு அவரே அகிலஇலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவராக இப்பெரிய பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டார். 1952ம் ஆண்டு செப்டம்பர் மாதம் எனக்குப்பின் ''சிலோன் ரீச்சர்'' சஞ்சிகையின் ஆசிரியராகக் கடமையேற்றுச் சில ஆண்டுகள் தொடர்ந்து அப்பணியைச் செவ்வனே ஆற்றிவந்தார். அவர் ஆசிரிய சங்கங்களின் பதவிகள் ஏற்குமுன்னரும், பலகாலம் அதற்குப்பின்னரும் ஆசிரியர் உலகின் பிரச்னைகளைப் பற்றியும் அவற்றைத் தீர்ப்பது குறித்தும் கவனமுடையவராக இருந்தார். இதில் இந் நாட்டின் தலைசிறந்த நிபுணராக மதிக்கப்பட்டார். 'சிலோன் ரீச்சர்' சஞ்சிகையில் அவர் எழுதியவையும் கல்விஇலாகாவில் உள்ள பல தஸ்தாவேஜுகளும் இதற்குச் சான்றுபகர்வனவாக உள்ளன.

இவ்வளவு காலமாக எனக்குக் கிடைத்த தம்பரின்நட்பை நான் பெரிதாக மதித்திருக்கிறேன். பல்வேறு விஷயங்களிலும் நுணுக்கமான அறிவும் நுண்ணியஅறிவும் பொதுவாகப் புத்திக்கூர்மையும் உள்ள இத்தகைய ஒருவருடன் வேறு விஷயங்களிலும் கலந்தாலோசிக்கக்கூடியதாக இருந்தமை எனக்குக் கிடைத்தற்கரிய பெரும் பேருகும். தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் குழப்பநிலைபற்றிக் கலந்துரையாடுவதற்காகவும், தெளிவுபெறவும் நாங்கள் ஒருவரை ஒருவர் இறுதிவரையும் சந்தித்திருக்கிறேம்.

# "சமய மறுமலர்ச்சிக்கு வழிவகுக்க வேண்டும்"

(மாவிட்டபுரம்)

''வாரந்தோறும் கூடிய கீதோபதேச வகுப்புக்களை நடத்தி சமய மறுமலர்ச்சிக்கு வழி சமைக்கவேண்டும்.''

அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை இவ்வாறு தீர்மானித்துள்ளது.

மயிலிட்டி தெற்கு ஞான வைரவர் ஆலயத்தில் இடம் பெற்ற மேற்படி சபையின் வருடாந்தப்பொதுக் கூட்டத்திலேயே இம்முடி எடுக்கப்பட்டுள்ளது.

சிவத்திரு க. சிவலோகநாதக் குருக்கள் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் நிறைவேறிய மற்றும் தீர்மானங்கள் வருமாறு:

அங்கத்தவர்கள் கோருமிடத்து சபை தனது செலவில் அவர்களுக்கு ஆசாரியாபிஷேகம்செய்துவைத்தல்.

சபைச் செயலாளர் எழுதி வெளியிடவுள்ள 'முத்திராலட்சண விதி' என்னும் நூலை இம்மாதம் 28ம் திகதி வெளியிட்டு வைத்தல்.

வருட சந்தாவை 50 ரூபாவாக அதிகரித்தல் உட்பட மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேறின.


**தங்க நகைகளுக்கும் தங்க கட்டிகளுக்குமான பணவசதி**

**த பிறின்ஸ் கம்பனி**
வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக
**தங்க நகைகளுக்கும்,**
**தங்க கட்டிகளுக்குமான**
**பணவசதி**
வழங்க முன்வந்துள்ளது. உங்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்போது, எம்முடன் கலந்தாலோசித்து, தவணை முறையிலோ, குறிப்பிட்ட கால எல்லையிலோ, பணத்தைச் செலுத்தி உங்கள் தங்க நகைகளையோ அல்லது பவுண் கட்டிகளையோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
**விற்பனை முகாமையாளர்,**

**த பிறின்ஸ் கம்பனி லிமிட்.**
**249, மின்சாரநிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**போன்: 7680**


# அதிகாரிகள் விடுதிகளில் திருட்டு!

(மன்னர்)

தலைமன்னர் துறைமுக குடியேற்ற வெளியேற்ற அதிகாரிகள் கடமைக்காக இரவு கப்பலுக்குச் சென்றபோது அவர்களின் 3 விடுதிகள் கொள்ளையடிக்கப்பட்டது.

விடுதிக்குக் திரும்பவந்து பார்த்த அதிகாரிகள் பணம் களவாடப்பட்டது கண்டு அதிர்ச்சியடைந்தனர். இத் திருட்டுச் சம்பவம்பற்றி தலைமன்னர் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# பாவனையாளர் புகார்

( லோலி)

பருத்தித்துறை விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தில் மரக்கறி வகைகள் பருத்தித்துறை சந்தையிலும் பார்க்க கூடியவிலைக்கே விற்பனை செய்யப்படுவதாக இப்பகுதி மக்கள் பருத்தித்துறை பாவனையாளர் சங்கத்திடம் புகார் செய்துள்ளனர்.

# தாபரிப்பு வழக்கு: கணவர் மனமுடைந்து தற்கொலை

(புலோலி)

மனைவி தாபரிப்பு வழக்குத் தாக்கல்செய்தமையினுல் மனமுடைந்த நாலு பிள்ளைகளின் தந்தையொருவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

அல்வாய் வடக்கு அல்வாயைச் சேர்ந்த கந்தையா கயிலாசசிங்கம் (வயது 38) என்பவரே கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டவராவர்.

இவரதுமரணவிசாரணையின் போது இவரது மனைவி இவர் மீது தாபரிப்பு வழக்குத் தாக்கல் செய்திருந்ததாகவும், சம்பவதினம் அத்தாபரிப்புவழக்குத் திகதி என்றும் மனைவி தாபரிப்பு வழக்குத் தாக்கல்செய்திருந்தமையால் இவர் மனமுடைந்து காணப்பட்டார் என்றும் தெரியவந்தது.

இறந்தவரால் எழுதப்பட்ட கடிதமொன்றும் மரணவிசாரணையின்போது சமர்ப்பிக்கப்பட்டது. சாட்சிகளைப் பருத்தித்துறைப் பொலிஸ் கான்ஸ்டபிள் ரீ. அருந்தவராசா நெறிப்படுத்தினர். மரண விசாரணைகளை மேற்கொண்ட திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். வயிரமுத்து தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

# பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தை மீறினராம்

(புலோலி)

பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி முத்திரையிடப்படாத அளவை, நிறுவைக்கருவிகளை வைத்திருந்த பருத்தித்துறை, நெல்லியடியைச் சேர்த்த ஆறு வர்த்தகர்கள் பருத்தித்துறைப் பொலிசாரிடம் வகையாகச் சிக்கிக் கொண்டனர்.

பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சரத் தனபால தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியிடமே முத்திரையிடப்படாத அளவை நிறுவைக்கருவிகளை வைத்திருந்தபருத்தித்துறை, நெல்லியடியைச் சேர்ந்த ஏ. நடராசா. முகமட், பாரூக், பி. செல்லன், எஸ். சிவசுப்பிரமணியம், கே. ஆனந்தராசா, கே. யோகநாதன் ஆகிய ஆறு வர்த்தகர்களும் சிக்கிக்கொண்டவர்களாவர்.

இந்த ஆறுவர்த்தகர்கள் மீதும் குற்றஞ்சாட்டிப் பருத்தித்துறைப் பொலிசார் வழக்கைத் தாக்கல் செய்யவுள்ளனர்.

# "இளைஞர், யுவதிகளுக்கு சிறந்த எதிர்காலம்"

(கரவெட்டி)

''தேசிய இளைஞர் சேவை மன்றத்தினுல் புதிதாக உருவாக்கப்பட்ட 'நிஸ்கோ' பிரிவினுல் யாழ். மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு சிறந்த ஒரு எதிர்காலம் மலரப் போகின்றது.''

இவ்வாறு யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற அதிகாரி திரு. கே. சிவானந்தமூர்த்தி வதிரியில் இளைஞர் கழகம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

வதிரி தமிழ் மன்றத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பண வைபவத்திற்கு தமிழ் மன்ற பொதுச் செயலாளர் திரு. சி. கே. இராஜேந்திரம் தலைமை வகித்தார். இளைஞர் சேவை மன்ற அதிகாரி திரு.சிவானந்தமூர்த்தி மேலும் பேசுகையில் கூறியதாவது:

''இந்தநாட்டில் வாழும் இளைஞர் யுவதிகளின் நலனில் அக்கறை கொண்டுஅவர்களின் திறமைகளை அவர்களுக்கும் நாட்டிற்கும் பயன்பெறக்கூடிய வகையில் வெளிக்கொணரச் செய்வதே தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நோக்கமாகும்,

''தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் திட்டங்கள்,நோக்கங்கள் வெற்றிபெற வேண்டுமானுல் இளைஞர்கள், யுவதிகளின் பூரண ஒத்துழைப்பு போதிய அளவு எமக்குக் கிடைக்க வேண்டும்.

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள 'நிஸ்கோ' பிரிவிற்கு 15 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட வயதுடைய இளைஞர், யுவதிகள் அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டு வருகிருர்கள் அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படவர்களுக்கு இம் மாவட்டத்திற்கு ஏற்ற வகையில் கைத்தொழில் திட்டம் ஒன்றும் விரைவில் உருவாக்கிக் கொடுக்கப்படவுள்ளது.

''இம் மாவட்டத்தில் வேலையற்று இருக்கும் இளைஞர் யுவதிகளை ஒன்று சேர்த்து அவர்களுக்கு கூட்டுறவு ரீதியில் தொழிலை ஏற்படுத்திக்கொடுப்பதே இந்த 'நிஸ்கோ' பிரிவின் நோக்கமாகும்''என்ருர்.

இளைஞர்சேவை உத்தியோகத்தர் செல்வி எஸ். மகேஸ்வரி, கரவெட்டிவடக்கு கிராம சேவை உத்தியோகத்தர் திரு. கே. வீரகத்திப்பிள்ளை ஆகியோரும் பேசினுர்கள். இளைஞர் கழகத்தலைவராக செ. உதயராசனும், செயலாளராக செ. ரவிச்சந்திராவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# மகா
## கும்பாபிஷேகம்

[வவனியா]

வவனியா நகரமத்தியில் புதிதாக உருவாக்கப்பட்ட ஆறுமுகப்பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் தைப்பூசத் தினத்தன்று மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இதனைத்தொடர்ந்து 21நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று மாசி 27ம் திகதி மண்டலாபிஷேக பூர்த்திவிழா சங்காபிஷேகம், உற்சவம் ஆகியன நடைபெறும்.

## பொருளாதார

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.தெல்லிப்பழை ப.நோ. கூ. சங்கத்தில் கடந்த வருடம் 5கோடி ரூபாவுக்கு வியாபாரம் நடந்துள்ளது. தனியார்துறையினர் என்ருல் இந்த வியாபாரத்தில் 20 வீத இலாபத்தை பெற்றிருப்பர். ஆனல் இக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு வீதம்கூட இலாபம் கிட்டவில்லை. இலாபத்தை கவனத்தில் கொள்ளாது மக்கள் சேவையையே கருத்தில் கொண்டு செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களை நாம் வளர்த்தெடுக்க பாடுபட வேண்டும். என்ருர்.

மற்றும் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. ச. வேலாயுதபிள்ளை மக்கள் வங்கி பிரதிநிதி திரு. வே. மகேந்திரராஜா சங்கப் பொது முகாமையாளர் திரு. சி நவரத்தினம் கூட்டுறவுப் பரிசோதகர் திரு. சின்னத்தம்பி உட்பட பலர் பேசினர்.

கிளைக்குழுச் செயலாளர் திரு. வே. மாணிக்கன் நன்றி கூறினர்.

# டீசலில் தண்ணீர் பஸ்சேவை பாதிப்பு

(மன்னர்)

வடபிராந்திய போக்குவரத்து சபையின் மன்னர் சாலையில் உள்ள பஸ்வண்டிகளுக்கு நிரப்பப்பட்ட டீசல் எண்ணெயில் தண்ணீர் கலக்கப்பட்டிருந்ததால், கடந்த செவ்வாய்க்கிழமை சேவையிலீடுபடுத்தப்பட்ட சகல பஸ் வண்டிகளும் அந்தந்த இடத்தில் நின்றுவிட்டன. இதனால் கடந்த செவ்வாய்க்கிழமை மன்னரில் பஸ்சேவை முழுதாக ஸ்தம்பிதமடைந்ததுடன் பிரயாணிகள் பெரும் சிரமங்களுக்குள்ளானர்கள்.

பஸ்வண்டிகளுக்கு நிரப்பப்பட்ட டீசல் எண்ணெயில் எவ்வாறு தண்ணீர் கலக்கப்பட்டது என்ற மர்மம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை!

## ஓடுபிரித்து ரூ.18,000 திருட்டு

[மன்னர்]

வீட்டிலுள்ளோர் நித்திரையில் இருந்தசமயம் பார்த்து ஓடு பிரித்து வீட்டினுள்ளே இறங்கிய திருடர்கள் 18 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் ரொக்கப் பணம் 400 ரூபாவையும் திருடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம்விடத்தல் தீவு கிராமத்தில் இடம்பெற்றது. நகைகளுடன் இரண்டு பெட்டிகளையும் திருடிய திருடர்கள் பெட்டிகளை அருகில் உள்ள வீடுகளில் வீசிவிட்டுச் சென்றுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

இத்திருட்டுச் சம்பவம்பற்றி மன்னர் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

## சட்டவிரோதமாக மணல் ஏற்றினராம்

(புலோலி)

அனுமதிப்பத்திரமின்றி சட்ட விரோதமாக கடல் மணல் ஏற்றிவந்த உழவு இயந்திரச் சாரதிக்கு 00ரூபா அபராதம் விதித்த பருத்தித்துறை நீதவான் மணலைப் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டார்

சண்முகம் பாலசுந்தரம் என்ற உழவு இயந்தியச்சாரதி அனுமதிப்பத்திரமின்றி சட்ட விரோதமாக உழவு இயந்திரத்தில் கடல் மணல் ஏற்றிவந்தபோது பருத்தித்துறைப்பொலிசாரிடம் சிக்கிக்கொண்டார்.

பொலிசார் இவரைப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே.எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்தனர். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

நீதவான் எதிரிக்கு 100ரூபா அபராதம் விதித்ததுடன் மணலையும் பறிமுதல் செய்யுமாறு உத்தரலிட்டார்.

## வருடாந்த அணிவகுப்பு

(மாவிட்டபுரம்)

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் யாழ். மாவட்டப் பிரிவு வருடாந்த அணிவகுப்பு நிகழ்ச்சிகள் மார்ச்மாதம் 3ம் திகதி யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளன.

வடமாநில கல்வியதிபதி திரு. க. சிவநாதன் இதில் பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

பாடசாலை மாணவர்களது முதலுதவிப் பிரிவுகளும் ஏனைய முதலுதவிப்படைப் பிரிவுகளும் இதில் பங்குபற்ற உள்ளன.

இதில் கொக்குவில் மேஜர் பிரிவ, திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க முதலுதவிப் பிரிவு. சுள்ளியங்காடு முதலுதவிப்படை ஆகியன இணைந்து விசேட அணிவகுப்பு ஒன்றையும் நடத்த உள்ளன.

அம்புலன்ஸ் படையின் மாகாண ஆணையாளர் முகாந்திரம். ஈ. பி. இராசையா, புரிவு ஆணையாளர் திரு. சுகந்தன் இன்னுசித்தம்பி ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

## "வெண்பாமாலை" வெளியீடு

(அரியாலை)

அரியாலை மேற்கு வெட்டுக்குளம் ஸ்ரீ புவநேஸ்வரி அம்பாள் ஆலய அறங்காவல் குழு செயலாளர் திரு. தா. தேவமதுரம், புவனேஸ்வரி அம்பாள் பேரில் பாடியுள்ள "புவனேஸ்வரி அம்பாள் அந்தாதி வெண்பா மாலை" யின் வெளியீட்டு வைபவம் மகா சிவராத்திரி விழாவில் சிறப்பு நிகழ்ச்சியாக நடைபெறவிருக்கிறது.

இளைப்பாறிய அதிபர் திரு. ம. சின்னையா தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் 'வெண்பா மாலை' வெளியிட்டு வைக்கப்படவிருக்கிறது.

திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்), திரு. அ. ஜெயப்பிரகாசம் அவர்களும் 'வெண்பா மாலை' பற்றிக் கருத்துரை வழங்குவார்கள்.

# தொகுதி அபிவிருத்திக்கு ஏராளமாக பணம் ஒதுக்கியும் வேலைகள் நடக்கவில்லை

## மானிப்பாய் எம். பி. கவலை

(ஏ. வி. மாணிக்கம்)

"82ம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் தொகுதிகள் அபிவிருத்திக்கு எம். பிக்கள் ஏராளமான பணம் ஒதுக்கியும் இதுவரை எதுவித வேலைகளும் மேற்கொள்ளவில்லை" என்று மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், யாழ். மாவட்ட அபிவிருத்திசபைக் கூட்டத்தில் கண்டித்துப் பேசினர்.

மானிப்பாய் தொகுதிக்கு 8—9 லட்சம் ரூபா அளவில் ஒதுக்கியுள்ளோம். அங்கு என்ன வேலைகள் மேற்கொள்ளப்பட்டன என்று கேட்ட திரு. தர்மலிங்கம், கிடைத்த பணத்தைக் கொண்டு விரைவில் வேலைகளைச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

மின்சார விஸ்தரிப்புக்கான வேலைகளைப் பொறுத்தவரை சிரமதானம் மூலம் செய்ய மக்கள் முன்வந்திருக்கிறார்கள் என்று தெரிவித்த அவர், எந்த வீடுகளில் இருக்கும் மக்கள் கூடிய சோலை வரியை கட்டியுள்ளார்களோ, சிரமதானம் மூலம் மின்னிணைப்புக்கான வேலைகளை செய்ய முன்வருகிறார்களோ அவர்களுக்கு முன்னுரிமையாக மின்சாரவசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சிரமதானம்மூலம் இவ்வேலைகளை செய்வித்தால் ஏராளமான பணத்தை நாங்கள் மீதப்படுத்தலாம்என்றுஆலோசனை தெரிவித்த மானிப்பாய் எம். பி., மின்சார விநியோகத்துக்கு அபிவிருத்திச்சபையில் பணமில்லாவிட்டால், வங்கியிலிருந்து கடனெடுத்து மின்சார வேலைகளைச் செய்யலாம் என்றும் சமூகசேவையாக இதனைச் செய்யாமல், வர்த்தக சேவையாக செய்யலாம் என்றும் சொன்னர்.

## எரிபொருள் நிலையம்

(பச்சிலைப்பள்ளி)

தாளையடியில் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையம் திறக்கப்படுவதைத் தொடர்ந்து அப்பகுதி மீனவர்களுக்கும் விவசாயிகளுக்கும் எரிபொருள் பெறுவதில் கஷ்டம் நீங்குகிறது.

இவ் எரிபொருள் நிரப்பு நிலையம் பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தினல் அமைக்கப்பட்டுள்ளது. இந் நிலையம் திறக்கப்படுவதினல் மாமுனை, செம்பியன் பற்று, குடாரப்பு, தாளையடி. மருதன்கேணி, உடுத்துறை, ஆழியவளை, முள்ளியான் மண்டலாய் ஆகிய பகுதிகளிலுள்ள மீனவர்களும் விவசாயிகளும் நன்மையடைவார்கள்.

இவ் எரிபொருள் நிலையத்தினை யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா இம்மாதம் 21ம் திகதி திறந்துவைப்பார்.

இவ் வைபவத்தில் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், கிளிநொச்சி எம். பி, திரு, வி. ஆனந்தசங்கரி ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள்.

## மின்தடையால் மக்களுக்கு ஏற்படும் கஷ்டம்

### நாகராசா விளக்கம்

"'மக்கள் மின்சாரத்தை தொடர்ந்து பாவிக்கமுடியுமா? என்ற சந்தேகம் இன்று ஏற்பட்டுள்ளது'' என்று யாழ். மாவட்டஅபிவிருத்தி சபையின் நிறைவேற்றுக்குழு உறுப்பிரான திரு. எஸ். நாகராசா, யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசா தலைமையில், யாழ். செயலகத்தில் நேற்று முன் தினம் இக்கூட்டம் நடைபெற்றது,

"மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதால் மின்சாரத்தை நம்பியிருக்கும் விவசாயிகள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகிறர்கள் என்று கவலை தெரிவித்த திரு. நாகராசா, மின்விநியோகம்பற்றி நாங்கள் தீவிரகவனம் செலுத்தவேண்டும் என்று வற்புறுத்தினர்.

அவர் மேலும் பேசுகையில். "விவசாயம், கைத்தொழில் முயற்சிகளுக்கும், வீட்டின் அத்தியாவசிய தேவைகளுக்கும் மின்சார பாவனை குறித்து மக்கள் அடிக்கடி விண்ணப்பித்துக்கொண்டே இருக்கிறர்களென்றும் குறிப்பிட்ட அவர் களுக்கு 'மின்சார மீற்றர்' சாதனங்கள் இல்லாததால் மின்சாரம் வழங்க முடியாமலிருப்பதாகவும் காலத்துக்குக் குக் காலம் மின்சார பாவனைப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதால் மக்களின் தேவையைப் பூர்த்திசெய்ய முடியாமல் தடையேற்படுகிறதென்றும் சொன்னர்.

மின்சார இலாகாப் பகுதியில் எவளவோ ஊழல்கள் ஏற்படுகின்றன. மின்சாரப் பொருட்கள் களவு, பாவனையாளர் களவு போன்றன வேகமாகப் பரவுகின்றன; இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் திரு. நாசராசா கேட்டுக்கொண்டார். (மா)

## உபமின்நிலையங்களுக்காக ரூ. 10 லட்சம் ஒதுக்கீடு

உப மின் நிலையங்களின் வலுவை அதிகரிக்கும் திட்டத்துக்கான கொடுப்பனவுத் தொகையாக பத்து லட்சம் ரூபாவை உப மான்யமாக யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை ஒதுக்கியுள்ளது.

உப மின்நிலையங்களின் வலுவை அதிகரிக்கும் திட்டத்தின்கீழ் 8 உப மின் நிலையங்களுக்கானமதிப்பீடு 10,03,500 ரூபாவாகும், இத்தொகையில் 10 லட்சம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. மிகுதி 3,500 ரூபாவையும் கொடுப்பதற்கு சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்நிதி உப மின் நிலையங்கள் அமைப்பதற்கல்லவென்றும் மின்மாற்றுவதற்கேஒதுக்கப்பட்டதென்றும் அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசா தெரிவித்தார். (மா)

# காங்கேசனில் நான்கு மின் திட்டங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி வழங்கும்!

(மாவிட்டபுரம்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் காங்கேசன்துறைத் தொகுதியில் நான்கு மின் விநியோகத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.

அளவெட்டி, தெல்லிப்பழை கிழக்கு, கட்டுவன், மயிலிட்டி வடக்கு பலாலி. ஆகிய நான்கு பகுதிகளிலுமே இத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இத்திட்டங்களுக்காக 78ம் ஆண்டு அங்கீகாரம் கிடைத்த போதும் வேலைகளை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டு தற்போது வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

அளவெட்டி மின்விநியோகத் திட்டத்தைத் தவிர ஏனைய மூன்று திட்டங்களுக்கும்ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் காங்கேசன்துறை பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கமும் 5லட்சத்து 40 ஆயிரம்ரூபாவை ஒதுக்கிக் கொடுத்துள்ளார்! 40 வீதமான பணத்தை எம். பி. ஒதுக்கிக் கொடுத்துள்ளார். 60 வீதமும் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியிலிருந்து வழங்கப்பட உள்ளது.

மேற்படி திட்டங்களும் முதல் மூன்று திட்டங்களும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மயிலிட்டி வடக்கு பலாலி மின் விநியோகத் திட்டம் விரைவில் ஆரம்பமாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டங்கள் நிறைவேறும் பட்சத்தில் மின் வசதியற்ற பல பகுதிகள் மின்சார வசதிபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

## இளம் பெண் தற்கொலை

(மன்னர்)

தாயின் கண்டிப்பை தாங்க முடியாத 17 வயது இளம் பெண் மனமுடைந்து கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

மன்னர் மாவட்டத்திலுள்ள பண்டிவிரிச்சான் குடியேற்றத் திட்டத்தைசேர்ந்த ஸ்டெல்லா என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

கிருமிநாசினி அருந்திய இளம்பெண் மன்னர் அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வைத்திய சிகிச்சையின்பின் மரணமானர்.

இவரது மரணம் தொடர்பாக மரணவிசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி ஜனப் எம். எம். ஆலம் தற்கொலை என தீர்ப்பளித்தார்.

## வருடாந்த திருவிழா

(கரவெட்டி)

டருத்தித்தித்துறை தும்பளை புனித லூர்த்து மாதா தேவாலய வருடாந்த நவநாட் திருவிழா கூட்டுப்பலிப்பூசை ஆராதனையுடன் நிறைவு பெற்றது.

யாழ். மேற்றிராணியார் அதி. வந். கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை கூட்டுப் பலிப்பூசையை நிறைவேற்றி வைத்தாரர்.

கரவெட்டி புனித லூர்த்து மாதா கன்னியர் மடத்தின் வருடாந்த தினம் அண்மையில் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

இக் கொண்டாட்டத்தில் யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த குருக்கள், கன்னியாஸ்திரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**சாந்தி** (யாழ்.நகர்) 10—30, 2—30, 4—45
7—00: 9—30

Last day 26—2—82
JIM BROWN, JIM KELLY
FRED WILLIAM SON

**Three The Hard Way**
(Action-color-adults)

27—2—82 HORROR EXPRESS

**வெலிங்டன்** தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்] ஜெய்சங்கர் —ஜெய்சித்ரா

**கல்யாணமாம் கல்யாணம்**
(புதிய பிரதி)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
10—30, 2—15, 4—45, 7—00, 9—30

**FIVE ANGRY WOMEN**
(கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

19 ம் திகதிமுதல் **ஞானக்குழந்தை**

**ராணி** (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30

இந்தியாவில் 100 நாட்களுக்குமேல் ஓடிய
வெற்றிச்சித்திரம்
கமலஹாசன் - ரதி நடித்த

**உல்லாசப் பறவைகள்**
(ஈஸ்ட்மன் கலர்)

**WINDSOR** Daily
(JAFFNA) 10.30, 2.00, 4.30, 7.00, 9.30

17th to 19th only
ROBERT DE NIRO in
**Taxi Driver** (Strictly for adults)

மாட்டின் ஸ்கோசெ என்பவருடைய தனிமையும்
பலாத்காரமும் சேர்ந்த முரண்பாடான ஆராய்ச்சி
உண்மையாகவே அதிர்ச்சியைக் கொடுக்கும் அனுபவம்

**Rajah** Daily 10—30, 2—00, 4—30,
JAFFNA 7—00, 9—30
From 17 to 18
SIDNEY PEITER in
**THE WILBY CONSPERACY**
(Color-Scope)

**ராஜா** 19-2-82 வெள்ளி முதல்
செம்மீன் புகழ் வெற்றிப் படத்தையடுத்து
வெளிவரும் வெள்ளிவிழா சித்திரம்
பிரதாப்-சுரேகா நடித்த

**தக்காரா**
(கலர்—மலையாளம்)

**யாழ். றீகல்** தினசரி 10—30, 2—30,
6—30, 9—30 நான்குகாட்சிகள்
காட்சிகள் வழமைபோல் காண்பிக்கப்படும்

**இன்றே பாருங்கள்!**

நிறம் மாறுத பூக்கள் புகள்

**விஜயன் ராஜேஷ்**

சுருளிராஜன்,
மாஸ்டர்
ரவிக்குமார்,
சத்தியகலாா,
சுவர்ணலத

(ஈஸ்ட்மென் கலர்)

டைரக்ஷன்:-
"நியா" புகழ்
துரை




# பாடசாலைகளில் மட்டுமே மாணவர்களுக்கு பருவகாலச் சீட்டுக்கள் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

''கல்வியென்பது சமூக சேவையாகும். எமக்கு சேவை செய்ய எம்மைத் தேடிவருகின்ற போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு முடிந்தளவு ஒத்துழைப்பை நல்கவேண்டியது நமது கடமையாகும். அவர்கள் எமது பள்ளிச் சிறுர்களுக்கு சலுகைக் கட்டணத்தில் பருவச்சீட்டு வழங்குவதற்காக பல இன்னல்களுக்கு மத்தியில் ஓயாது உழைக்கிறுர்கள். அண்மையில் அரசு கூட கல்வி அமைச்சிடமிருந்து போக்குவரத்து அமைச்சுக்கு மானியம் அளிக்க வேண்டுமென்ற விடயம்பற்றி தீவிரமாக ஆலோசித்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, அதிபர்களாகிய உங்களுக்கு ஒருசில கஷ்டங்கள் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாது வ. பி. போ. சபை அலுவலர்களுக்கு நீங்கள் நிச்சயம்உதவி செய்தே ஆகவேண்டும்.''

பாடசாலை அதிபர்களுடனும், வடபிராந்திய போக்குவரத்துச் சபை அலுவலர்களுடனும் பருவச்சீட்டு வழங்கல் தொடர்பாக யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. க. சிவநாதன் நடத்திய மாநாட்டில் மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

பருவச்சீட்டு வழங்குதலில் நடைபெற்றுவருகின்ற பல்வேறு மோசடிகளை கல்விப் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவந்ததன் விளைவாக அவர் இம் மாநாட்டைக் கூட்டினுர். மாநாட்டின் ஆரம்பத்தில் யாழ். சாலை அத்தியட்சகர் திரு. ப. உ. மகாலிங்கம் இப்பிரச்னை தொடர்பாக தாம் எதிர்நோக்குகின்ற பல்வேறு கஷ்டங்களை கல்லூரி அதிபர்களுக்கு விளக்கி இதற்குத் தீர்வு காண்பதற்கு அவர்களின் ஒத்துழைப்பைக் கோரினுர்.

அவர் மேலும் உரையாற்றுகையில், சில பாடசாலை மாணவர்கள் இரண்டு அல்லது மூன்று பருவச்சீட்டுக்களை வைத்திருக்கின்றனர் என்றும் இதன்மூலம் சபை நாளாந்தம் பல ஆயிரம் ரூபாவை இழக்கின்றதென்றும் கூறினுர்.

எதிர்வரும் மாதம் தொடக்கம் பாடசாலைகளில் மட்டுமே மாணவர்களுக்கு பருவகாலச் சீட்டுக்கள் வழங்கப்படும் என்றும், எக் காரணம் கொண்டும் யாழ். மத்திய பஸ்நிலையத்தில் இவர்களுக்குப் பருவச் சீட்டுக்கள் வழங்கப்பட மாட்டாதென்றும் அவர் குறிப்பிட்டார்.

''பாடசாலைக்கு அனுப்புகின்ற படிவங்களை குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் பாடசாலை அதிபர்கள் பருவச்சீட்டுப்பெற விரும்புகின்ற மாணவர்களின் விபரம்களோடு அவருக்கு அனுப்பவேண்டும். உரிய நடவடிக்கையின் பின்னர் அவர் அப்படிவத்தை மீளவும் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைப்பார். அதன் பின்னர் குறித்த ஒரு நாளில் பாடசாலைகளில் பருவச்சீட்டுகள் வழங்கப்படும். பாடசாலைகளில் குறித்த தினத்தன்று பருவச்சீட்டுக்களைப் பெற முடியாத மாணவர்களுக்கு மாற்று மாற்று ஒழுங்குகள் செய்யப்படும்.

பாடசாலைகளில் மட்டுமே பருவகாலச்சீட்டுக்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முழுமனதாக ஆதரித்த பாடசாலை அதிபர்கள், இத் திட்டத்தை உடனடியாக செயற்படுத்துமாறு கேட்டுக்கொண்டனர். அதற்கேற்ப இம்மாதம் தொடக்கம் பருவச் சீட்டுக்கள் பாடசாலையில் மட்டுமே வழங்கப்படும். சிறியபாடசாலையைப் பொறுத்தளவில் மாற்றெழுங்குகள் செய்யப்பட்டுள்ள.

கல்விப்பணிப்பாளர் திரு. சிவநாதன் அதிபர்களுக்கு ஆற்றிய உரையில் வருங்கால சந்ததியின் ஒளி நட்சத்திரங்களான மாணவ சமுதாயம் பருவச்சீட்டு துஷ்பிரயோகம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமக்கும் தாம் கல்வி பயிலும் கல்லூரிக்கும் களங்கம் ஏற்படுத்தாதவாறுநடந்து கொள்வதை உறுதிப்படுத்துவது அதிபர்களின் தலையாய பணியென்றும் இப் பணியினை நிறைவேற்ற வடபிராந்திய போக்குவரத்து சபை அலுவலர்கள் முன்வரும்போது அதிபர்கள் பின் நிற்காது அவர்களுடன் இணைந்து கருமமாற்ற வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

சாலை அத்தியட்சகர் அதிபர்களுக்கும் கல்விப் பணிப்பாளருக்கும் நன்றி கூறுகையில் மிகக் குறுகிய கால அறிவித்தலில் யாழ். நகரின் பிரபல பாடசாலை அதிபர்கள் யாவரையும் தம் அலுவலகத்திற்கு அழைத்து எமது சபைக்கு ஒத்துழைப்பை அளித்த கல்விப் பணிப்பாளரின் சேவை இதர அரச அலுவலர்களுக்கு ஓர் முன்மாதிரியாக திகழ வேண்டுமெனவும் இவரைப்போல ஏனை உத்தியோகத்தர்களும் அதிபர்களும் ஒத்துழைத்தால் எம் பணி இலகுவாகுமெனவும் குறிப்பிட்டார்.

இம் மாநாட்டில் யாழ். டிப்போ பரிசோதனைக்குழு பொறுப்புத்தியோகத்தர் திரு. எம். ஏ. கந்தசாமியும் சபையின் பாதுகாப்பு உத்தியோகத்தர் திரு, சண்முகசுந்தரமும் பங்குபற்றினர்.

# இன்றைய பலன்

மாசி மாதம் 6 ம் திகதி
வியாழக்கிழமை
(18—2—82)

மேடம்: இதயக்கமலம் இன்பத்தால் மலரும், இல்லத்தில் பிணைப்புகள் இறுகும், கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும், கற்றதால் பயன் கிடைக்கும்.

இடபம்: மிகவும் நிதானத்துடன் காரியங்களில் ஈடுபடவேண்டும், எச்சந்தர்ப்பத்திலும் அவசரப் போக்கை தவிர்த்துக்கொள்ளவும், நீண்ட பிரயாணத்தை இன்று தள்ளிப் போடுவது விரும்பத்தக்கது.

மிதுனம்: எதிர்பார்த்த இன்பம் இன்று உங்களை அணைத்துக்கொள்ளும், ஆரம்பத்தில் முட்டுக்கட்டை போட்டவர்கள் இன்று ஆதரவு கொடுப்பார்கள், காதல் ஜோடிகளுக்கு பொன்னுனதினம்.

கடகம்: எதிர்பார்த்த வரவில் தடை ஏற்படும், பிரயாணத்தின்போது பொருள் நழுவக்கூடும், புதிய தொழில்களை திருத்திக்கொள்ளவும், மனத்தளர்ச்சிக்கு இடமளியாது நடந்துகொள்ளவும்.

சிங்கம்: பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும், தெய்வத்தின் அருளும் உண்டு.

கன்னி: தொழில்துறையில் நல்மாற்றங்கள் ஏற்படும், மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், நண்பர்கள்மூலம் புதிய தொடர்புகள் ஏற்படும், இன்று சுபதினம்.

துலாம்: வீட்டில் மகிழ்ச்சிகரமான சம்பவங்களுக்கு இடமுண்டு, முயற்சிகள் இன்று கைகூடும், விருந்துபசாரங்களும் உண்டு, சிலருக்கு வாகன இலாபமும் கிடைக்கலாம், மாணவர்களுக்குக் கல்வியில் முன்னேற்றம் உண்டு.

விருச்சிகம்: வாய்வுக்கோளாறு உடல் நலத்தைப் பாதிக்கலாம், உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும், தானிய நஷ்டத்துக்கு இடம் உண்டு, வியாபாரிகள் புதிய முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும்.

தனு: அவசர புத்தியால் விபரீதங்கள் விளையலாம், கோபத்தை அடக்கின் நிலைமை சீர்பெறும், அடக்கமாக இருக்கவும்.

மகரம்: வார்த்தை ஜாலம் செய்வதன்மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள், எழுத்தாளர்களுக்கு சிறப்பானதினம், இருக்குமிடத்தில் ஆதரவு பெருகும், சிலருக்கு பொதுசன தலைமையும் கிடைக்கலாம்.

கும்பம்: உறவு முறைகளில் பிளவுகளே தென்படும், மனதில் உற்சாகம் குன்றும், அபாயகரமான காரியங்களில் ஈடுபடாதிருக்கவும், இனத்தவர்களுடன் பகைத்துக்கொள்ளாதீர்

மீனம்: ஆராய்ச்சியாளர்களுக்கு பொன்னுனதினம், அறிவுத்தாகம் மேலிடும், இனபந்துக்களின் கொண்டாட்டங்களும் இடம்பெறும், சிலர் புதிய வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதில் கருத்தைச் செலுத்துவர்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

**வெஸ்லி** மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.15
21—2—82 வரை
**மேஜர் சந்திரகாந்த்**

**ஹரன்** யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்...ஜெய்சித்ரா
நடித்த
கலைஞர் மு. கருணாநிதியின்
**வண்டிக்காரன் மகன்**

# ரூ. 5லட்சம் செலவில் நிரந்தர கட்டம்

(புலோலி)

பருத்தித்துறை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஐந்து லட்சம் ரூபா செலவில் நிரந்தரக்கட்டிடம் அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சங்கத்தலைவர் திரு. கே. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட ஏனைய தீர்மானங்களாவன.

''சங்க அங்கத்தவர்களுக்கு வழங்கப்படவுள்ள இரண்டாவது கொடுப்பனவுப் பணத்தை ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் சேமிப்புக்கணக்கு ஆரம்பிக்கப்பட்டு அப்பணத்தை இரண்டுவருடங்களுக்கு மீளப் பெறமுடியாதவாறு கணக்கில் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

சீவல் தொழிலாளர்களுக்கு வேண்டிய உபகரணங்களை குறைந்த விலைக்கு விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**ஸ்ரீநர்** தினசரி: 10:30, 2:30, 6:00, 9:30
யாழ். நகர் சிவாஜி ஜெயலலிதா
**பட்டிக்காடா பட்டணமா**
(புதிய பிரதி)

# வரி விளம்பரம்

## பயிற்சி

வெல்டிங், வயறிங், செய்முறை, அறிமுறையுடன் (28—2—82) ஆரம்பம். C.F.T. ஐலன்ட், 58, ஸ்ரான்லி ரேட், விகாரைக்கு முன்பாக, யாழ்ப்பாணம். 2287

## தேவை

பிரபல வியாபாரஸ்தாபனம் ஒன்றிற்கு பெண் காசாளர் தேவை. ஆங்கிலம், தமிழ், கணக்கு, தெரிந்தவர்கள் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 2303 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 2303

ஆங்கில அறிவும், ஆங்கில தட்டெழுத்தும் தெரிந்த, நல்லொழுக்கமுள்ள ஒருவர் தேவை. யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் இருப்பவரும் ஒய்வூதியம் பெறுபவர் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 2301 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2301

## விற்பனைக்கு

நல்ல நிலையில்உள்ள குளிர் சாதனப் பெட்டியும், கெசற் செற் (Three in one) நெஷனல் ஒன்றும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும், செல்லமுத்து காட்வெயர்ஸ் 173, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2297

சுன்னுகம்
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)
சுன்னுகம்

## முக்கிய அறிவித்தல்

சுன்னுகம் ப. நோ. கூ. சங்கத்தினுல் நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளது. நெல் விற்பனை செய்வோர் நேரடியாகச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்

15—02—82. 2296

சங்கானை
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## வெற்றுச் சாக்கு கேள்வி விளம்பரம்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட 3640 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. வைப்புப் பணமாக ரூபா. 250/— செலுத்தி விண்ணப்பப் படிவம் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விண்ணப்பப் படிவங்கள் பதிவுத்தபால் மூலம் இடது பக்க மூலையில் ''வெற்றுச் சாக்குகள் கேள்வி'' என்று எழுதப்பட்டு பொதுமுகாமையாளர் சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 25—2—82.

பொதுமுகாமையாளர்.
சங்கானை
16—2—82. 2306

## வெற்றி தோல்வி இல்லை

(கோண்டாவில்)

கொக்குவில் இந்துக் கல்லூரி கோஷ்டிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரி முதல் இரண்டாம் இன்னிங்சில் 146, 106 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கட்டுகளையும் இழந்தது.

பழைய மாணவர்கள் முதல் இன்னிங்சில் 216 ஓட்டங்களைப் பெற்றுர்கள். இப்போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (க)

காரைநகர் அம்பாள் சமூகசேவா, கலா மன்றத்தால் 14.2.82 நடாத்திய

## அதிஸ்டலாப முடிவுகள்

| | |
|---|---|
| 1ம் பரிசு | 1357 |
| 2ம் பரிசு | 101 |
| 3ம் பரிசு | 91 |

ஆறுதல் பரிசுகள்:

| | |
|---|---|
| 867 | 1136 |
| 1127 | 1062 |
| 1365 | 1042 |
| 1383 | 418 |
| 1384 | 959 |

2305

திருமதி
ச. இளங்கோவன்
சட்டத்தரணி

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில்

புளியங்கூடல் வேலணையைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகலிங்கம் கந்தையாவின் மரணச் சொத்து நிர்வாகத் தத்துவப் பத்திர விடயத்தில்

— மரணமெய்தியவர்

நா. கந்தையா விக்னேஸ்வரன் புளியங்கூடல், வேலணை.

—மனுதார்.

வழக்கு இல: தத்துவம் / 48

எதிராக

1. நாகலிங்கம் கந்தையா கைம்பெண் பூபதி தனக்காகவும் 7ம் 8ம் 9ம் பராயமற்ற எதிர்வாதிகளின் வழக்குப் பாதுகாவலராகவும் புளியங்கூடல், வேலணை.
2. தம்பையா தருமதுரை
3. பெண் உமாதேவி இருவரும் சொத்தம்பியாகுளம், துணுக்காய்.
4. கந்தையாமகள் சித்திராதேவி.
5. கந்தையாமகள் ஈஸ்வரி.
6. கந்தையா வாமதேவன். புளியங்கூடல், வேலணை, தற்போது Bismark Str 13,5828 Ennopetal West Germany.
7. கந்தையாமகள் கணேஸ்வரி.
8. கந்தையா இளமுருகன்
9. கந்தையா சிவனேசன் எல்லோரும் புளியங்கூடல், வேலணை.

—எதிர்மனுதாரர்கள்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தி தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982ம் ஆண்டு மாசி மாதம் 25ம் திகதி முற்பகல் 9 00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுர்கள்.

நீதிமன்றக் கட்டளைப்படி.

பதிவாளர்.

## அபிவிருத்தி சபைக்கு அறிவிப்பு

(வவனியா)

மாவட்டங்களில் வரும் பதவி வெற்றிடங்கள் அப்பகுதி மாவட்ட அபிவிருத்தி சபையின் மூலமே நிரப்பப்படவேண்டும் என ஜனுதிபதியின் பணிப்புரையின் கீழ் திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் வவனியர் மாவட்ட அபிவிருத்திசவப செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம்
அபிவிருத்திச் சபை

## அறிவித்தல்

1982—ம் ஆண்டு மார்ச்சு மாதம் 5—ந் திகதி காலை 10-00 மணிக்கு யாழ். அபிவிருத்திச் சபைப் பிரதிச் செயலாளர் (நிர்வாகம், சட்டம், வேலைப் பகுதி) அவர்களால் கிளிநொச்சித் தொகுதியில் இருக்கும் கராச்சிக்கிராமத்தில் கிராமியப் பாலம் அமைப்பதற்கு பெருந்தெருக்கள் திணைக்களம், கட்டிடத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் அரசாங்கத் திணைக்களங்களில் ரூபா 100,000·00க்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் காலை 10—30க்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

கேள்விக்காரர் ரூபா 100·00 வைப்புப் பணமாகவும் ரூபா 25·00 கிரயமாகவும் யாழ். அபிவிருத்திச் சபைத் தலைமைச் செயலகத்தில் செலுத்துவதன் பேரில் 1982.03·1 ந் திகதி மாலை மூன்று மணி வரை கேள்விப்பத்திரம் வழங்கப்படும்.

மேலும் தேவையான விபரங்கள் பிரதிச் செயலாளர் (நிர்வாகம், சட்டம், வேலைப் பகுதி) அவர்களின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்,

அன்ரன் அல்பிரெட்,
பிரதிச் செயலாளர்,
(நிர்வாகம், சட்டம்,
வேலைப்பகுதி)
யாழ் அபிவிருத்திச் சபை.

உள்ளூராட்சி
உதவி ஆணையாளர்
திணைக்களம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
15—02—1982. (2292)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு
100 ஆட்கள் தேவை
(Labourers) தகுதியைப் பொறுத்து

## வெளிநாட்டில்

பயிற்சி அளிக்கப்படும் வாய்ப்பு உண்டு.
நேர்முகப் பரீட்சை 18, 19, 20-2-82
சகல தஸ்தாவேஜுகளுடனும்
நேரில் வரவும்.

பாலேந்திரா பாலேந்திரா,
(திருவள்ளுவர் சிலைக்கு அருகாமையில்)
95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(2304)

## விளம்பரதாரர் கவனத்திற்கு!

மறுநாள் பத்திரிகையில் பிரசுரிப்பதற்குரிய உள் பக்க விளம்பரங்கள் தினசரி காலை 9 மணி முதல் நண்பகல் 12—00 மணி வரையும், வெளிப்பக்க விளம்பரங்கள் பிற்பகல் 7—00 மணி வரையும், மரண அறிவித்தல் விளம்பரங்கள் இரவு 9—30 மணி வரையும் யாழ்ப்பாணம், கே. கே. எஸ். வீதி 303-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

நிர்வாகி, 'ஈழநாடு'.

## பிஸ்கால் விற்பனை

யாழ்மாவட்ட நீதிமன்ற வழக்குஇல. காணி/5745

கந்தையா சின்னப்பு போல்
நவாலி தெற்கு, மானிப்பாய்.

வழக்காளி

எதிராக

முத்து தெய்வேந்திரம்
56, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

எதிராளி

மேற்படி வழக்கில் எதிராளி வழக்காளிக்கு ஆதன ஆட்சி ஒப்ப நிறைவேற்றுச் செலவு காரணமாக ரூபா 3719/— கொடுக்கவேண்டுமென கோடு உத்தரவு பிறப்பித்துப், பிஸ்காலின் பாதுகாப்பிலிருக்கும் எதிராளிக்குச் சொந்தமான உதிரிப்பாகங்களை விற்று வழக்காளியின் தொகையைக் கொடுப்பனவு செய்து மீதத்தைக் கோட்டின் கணக்கில் வைப்புச் செய்யுமாறு பணித்துள்ளமையால் இல. 370, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் நின்று எதிராளிக்குச் சொந்தமானதும் தற்சமயம் பிஸ்காலின் பாதுகாவலிலிருக்கும் உதிரிப்பாகங்கள் என்னுல் பிஸ்கால் விற்பனை நிருவாகங்கட்கமைய பகிரங்க ஏலத்தில் 1982—ம் ஆண்டு பங்குனி மாதம் 10—ந் திகதி பிற்பகல் 3—00 மணிக்கு விற்கப்படுமென இத்தால் அறியத்தருகிறேன்.

அன்றைய தினம் வாங்கற்காறர்கள் பிற்பகல் 1—00 மணி தொடக்கம் பிற்பகல் 2—00 மணி வரை பொருட்களைப் பார்வையிடலாம்.

தா. குலஞானம்,
பிஸ்கால்,
யாழ் மாவட்ட நீதிமன்றம்.

(2300)

நாடகம்! நடனம்!! இசை!!!

## இலங்கை அவைக்காற்று கலைக்கழகம்

மூன்றுண்டு நிறைவையொட்டி இருநாள் கலைநிகழ்ச்சிகள்

முதல் நாள்
பெப்ரவரி 20 சனி மாலை 6-30 மணி

1. "முகமில்லாத மனிதர்கள்"
நெறியாள்கை க. பாலேந்திரா
2. காமன்கூத்து
மலையக மரபு வழி

இரண்டாம் நாள்
பெப்ரவரி 21
ஞாயிறு மாலை 6-30 மணி

1. நர்த்தனக்கோலம்
நடனம்;
செல்வி ஆனந்தராணி ராஜரட்னம்
2. கானசாகரம்
இசை: எம். கண்ணன்

## யாழ். வீரசிங்கம் மண்டபம்

ரிக்கற்: இரண்டு நாள் நிகழ்ச்சிகளுக்கும் சேர்த்து 10/-, 5/- மட்டுமே
தனி ஒரு நாள் நிகழ்ச்சிக்கு 6/- 4/-

பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் மண்டப வாயிலிலும் கிடைக்கும்.



யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட முதல் தொகுதிக் கட்டிடத்தினை பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் மங்கள விளக்கேற்றித் திறந்துவைப்பதை இங்கு காணலாம். அருகில் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் ஸ்ரான்லி கல்பகே, திரு. சு. கி. மனோகரரூபன், முன்னாள் மருத்துவபீடாதிபதி டாக்டர் கூவர், திரு. இ. வெற்றிவேலு ஆகியோர் காணப்படுகின்றனர்.

# "குற்றவாளிகளை மறைக்க தமிழக அரசு விரும்பவில்லை"

## அனைத்துக் கட்சிகளின் ஆதரவை எம். ஜி. ஆர். கோருகிறார்

சென்னை, பெப். 17

''தமிழ்நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட அனைத்துக்கட்சிகளும் மாநில அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்'' என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தமிழ்நாடு சட்ட சபையில் இன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

''போல்கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதில் கால தாமதம் ஏற்படவில்லை. இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளகுற்றவாளிகளை மறைக்க தமிழ்நாடு அரசு விரும்பவில்லை'' என்றார். (வெ)

## உதவி அரசாங்க அதிபர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி தெற்கு (வேலணை) உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. குணநாயகம் வவனியாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இம்மாதம் 22 ம் திகதிமுதல் இவர் வவனியா உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றவுள்ளார்.

கிளிநொச்சி, பூநகரி பகுதியிலும் இதைத்தொடர்ந்து தீவுப்பகுதியிலும் உதவி அரசாங்க அதிபராகப் பணிபுரிந்த திரு குணநாயகம் கிழக்கு மாகாணத்திலும் கடமையாற்றியது குறிப்பிடத்தக்கது. (வ)

# கிரிக்கெட் டெஸ்ட் இலங்கை: 8--183

(கொழும்பு)

இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்குக்கும் இலங்கைக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே கொழும்பு சரவணமுத்து மைதானத்தில் நேற்று ஆரம்பமான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட்டில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை கோஷ்டி தனது முதலாவது இன்னிங்சில் நேற்று 8 விக்கட்டுகளை இழந்து 183 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் அர்ஜுன ரணதுங்கா 54 ஓட்டங்களையும், ரஞ்சன் மடுகல்ல ஆட்டமிழக்காது 64 ஓட்டங்களையும் எடுத்தது குறிப்பிடத்தக்கது,

ரஞ்சன் மடுகல்லையும், அர்ஜுன ரணதுங்காவும் சோடி சேர்ந்து ஆடி 99 ஓட்டங்களை எடுத்திருந்தனர்.

இங்கிலாந்து வீரர் அன்டர்வூட் 18 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுகளை வீழ்த்தினார். பொப்விலிஸ் 2 விக்கட்டுகளையும், இயன் பொதம் 2 விக்கட்டுகளையும் வீழ்த்தினர்.

ஆட்டம் இன்று காலை தொடர்ந்து நடைபெறும். (வெ)

### பாக். ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்காதபோதிலும், சுகயீனம் காரணமாகவே அவர் ராஜினுமாச் செய்வதாகச் செய்திகள் தெரிவித்தன.

### அதிகாரிகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு விண்ணப்பித்துள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து பல நூற்றுக்கணக்கான படகுகள் சேவையில் ஈடுபடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (வ)

நஷனல்-சொனி ரெலிவிஷன்களுக்கு

எஸ். சின்னத்துரை அன் பிறதர்ஸ்

யாழ்ப்பாணம். போன்: 284

## இப்படியும் நடக்கிறது

ஆயுதப் படையினர், குறிப்பாக இராணுவத்தினரும், கடற்படையினரும் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை பஸ்களில் 'ஓசி'யில் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனரா?

யாழ். மாவட்டத்தில் குறிப்பிட்ட சில இடங்களிலும், மன்னார் மாவட்டத்தில் பிரதான வீதிக்குச் சமீபமாக உள்ள முகாமுக்கு அருகிலுள்ள ஒரு பஸ்தரிப்பு நிலையத்திலிருந்தும் ஆயுதப் படையினர் அதிக அளவில் பஸ்களில் இலவசமாகப் போய்வருகின்றனராம்!

காதோடு காதாக—

பஸ்களில் இவர்கள் ஏறினால், பஸ் கண்டக்டர்கள் 'டிக்கட்' பற்றிக் கேட்பதே இல்லையாம்!

ஊடுருவி

# வ. பி. போ. சபையின் விளையாட்டு விழா

## மார்ச் 6-ல் நடைபெறுகிறது

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் பஸ் டிக்கட்டுக்களுக்கான மாதாந்த பரிசளிப்புத்திட்டத்தின் கீழ் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட முதலாவது சீட்டிழுப்பின் பரிசளிப்பு விழா மார்ச் மாதம் ஆறும் திகதி யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் நடைபெறவிருக்கிறது. இச் சீட்டிழுப்பு பரிசளிப்பு வைபவத்தையொட்டி வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் சில வர்த்தக ஸ்தாபனங்களின் ஆதரவுடன் மாபெரும் விளையாட்டு விழாவை நடாத்த தீர்மானித்துள்ளனர்.

விளையாட்டு விழாவில் வலுவிழந்தோர்களுக்கானஇரண்டு மைல் முச்சக்கர சைக்கிள் ஓட்டப்போட்டி, மாட்டு வண்டில் சவாரி, 42 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி ஆகியன இடம்பெறும். 42 மைல் சைக்கில் ஓட்டப்போட்டி கிளிநொச்சி சாலையில் ஆரம்பமாகி யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தை வந்தடையும். மாட்டு வண்டில் சவாரி வீரசிங்கம் மண்டபத்திற்கு எதிராக உள்ள திறந்த வெளியிலும் முச்சக்கர சைக்கிள் ஓட்டப் போட்டி யாழ்ப்பாணம் கோட்டையை சுற்றியுள்ள வீதியிலும் நடைபெறும்.

இவ்விழாவுக்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தலைவரும், தகவுடை அதிகாரியுமான திரு.சி கனகரத்தினம் தலைமைவகிப்பார். போக்குவரத்து, முஸ்லிம் விவகார அமைச்சருமான ஜனாப் எம். எச். மொகமட் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். விழாவின் இறுதி நிகழ்ச்சியாக யாழ்ப்பாணம் இசைக் குழுவினரின் இன்னிசை விருந்தும் இடம் பெறும். விழாவில் ஸ்ரீலங்கா மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் கலாநிதி காமினி விஜயசேகராவும் ஏனைய போக்குவரத்துச் சபைகளின் பிராந்தியத் தலைவர்களும் கலந்துகொள்வார்கள். வெற்றி பெறுவோருக்குப் பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும்.

# இம்மாத இறுதியில் மின்வெட்டு அமுல்

## அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

அடுத்த சில தினங்களில் மழை இல்லாவிட்டால், இம்மாத இறுதியில் நாடுமுழுவதும் மின்வெட்டை அமுலுக்குக் கொண்டுவருவதென்றுஅமைச்சரவை தீர்மானித்துள்ளது.

வாராந்த அமைச்சரவைக் கூட்டம் நேற்று நடைபெற்றபோதே மேற்கண்ட முடிவு செய்யப்பட்டது.

### நிவாரண உதவி

வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவியுடன் உணவுமுத்திரையும் வழங்குவதென்றும் அமைச்சரவை தீர்மானித்தது.

### காணி உறுதிகள் வழங்கப்படும்

அரச காணிகளில் குடியேறிய நான்கு லட்சத்து முப்பதினாயிரம்பேர்களில் இரண்டு லட்சம் பேருக்கு காணிஉறுதிகள் வழங்குவதென்றும் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

### யாழ். ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டல்மீது திடீர் சோதனை நடைபெற்றதாகத்தெரியவருகிறது. இராணுவ டிரக் வண்டியில் வந்த இராணுவத்தினர் கோஷ்டி ஒன்றுதான் இத்திடீர் சோதனையை மேற்கொண்டது. (வ)

### வடபகுதி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரயாணிகள் நலன் கருதி, அம்பன்பொலரயில்நிலையத்துக்கும் மாகோ ரயில்நிலையத்துக்குமிடையே பஸ்சேவை நடைபெறுகிறது.

## காங்கிரஸ் உறுப்பினர்கள் கண்டனம்

வாஷிங்டன், பெப் 17

அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் எல்சல்வடோருக்கு ஆதரவளித்து வருவதை ஜனநாயக கட்சியின் காங்கிரஸ் உறுப்பினர்கள் கண்டித்துள்ளார்கள்.

எல்சல்வடோரில் வன்செயல்கள் அதிகரித்துள்ளதாகவும் அங்கு இதனால் சுமார் 30,000 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

என்சல்வடோரில் மனித உரிமைகள் உதாசீனம்செய்யப்பட்டுவருவதால், ஜனாதிபதி றீகன அந்நாட்டிற்கு அளித்துவரும் ஆதரவை நிறுத்தவேண்டும்என்றும் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (வெ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காகயாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் பெப்ரவரி மீ 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.10(236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.